Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-11 | 27-08-2005 | சனிக்கிழமை | ஓசை-191



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12429) விநாயகர் வீதி, மயிலிட்டி.



## விடுதலையின் அர்த்தம் செறிந்ததாக இந்தத் தலைமுறையை வளர்த்தெடுப்போம்

### பயிற்சிப் பட்டறை ஆரம்ப நிகழ்வில் சு.ப. தமிழ்ச்செல்வன்

விடுதலையின் அர்த்தம் செறிந்ததாக எமது சமூகத்தின் இந்தத் தலைமுறையை வளர்த்தெடுப்போம். இதுவே எமது தலைவரது சிந்தனையின் வெளிப்பாடு என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் கூடிய அனுசரணையின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் சிறுவர் பூங்காக்களின் ஆசிரியர்கள், பராமரிப்பாளர்களுக்கான இரண்டுநாள் பயிற்சிநெறி வகுப்புக்கள் நேற்று ஆரம்பமானது. ஊரகவளர்ச்சிப்பணியினரால் பராமரிக்கப்பட்டுவரும் குமா சிறுவர் பூங்காவின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பயிற்சிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இவ்வாண்டே சனாதிபதித்தேர்தல்;

# சந்திரிகாவின் பதவி டிச.22இல் முடிவு!


## உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

(கொழும்பு)

**சிறிலங்காவின் அடுத்த சனாதிபதித் தேர்தல் இவ்வாண்டிலேயே நடைபெற வேண்டும் என நேற்று சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதற்கமைய சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் 22ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.**

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான ஐந்து உயர் நீதிமன்ற நீதிய

(12ஆம் பக்கம் பார்க்க)



வெற்றிக்களிப்பில் ஜாதிக ஹெல உறுமய

## இராணுவத்தின் கெடுபிடி: விபத்தில் சிக்கியவர் மரணம்!

### ஓமந்தை சோதனைச் சாவடியில் தாமதத்தால்சம்பவம்

(அலுவலக செத்தியாளர்)

ஓமந்தை சோதனைச் சாவடியில் இராணுவத்தினரின் கெடுபிடி காரணமாக காயமடைந்து மேலதிக சிகிச்சைக்கென எடுத்துச் செல்லப்பட்டவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லையென கிளி. மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி டிப்போ சந்தி ஏ-9 நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்து துவிச்சரக்கரவண்டியுடன் மோதியதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பஸ்தர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் திணைக்களத்தில் முக்கிய ஆலோசனைக் கூட்டம்

### நவம்பர் 18 இல் தேர்தல்?

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் இந்த ஆண்டிலேயே நடத்தப்பட வேண்டும் என்று சிறிலங்கா தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதியன்று தேர்தல் திணைக்களத்தில் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அனைத்து உதவித் தேர்தல் ஆணையாளர்களையும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வருமாறு தேர்தல் ஆணையாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை அருகே குவிக்கப்பட்ட இராணுவத்தை அகற்றக்கோரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு!

### திருமலை தமிழ் மாணவர் அமைப்பு அழைப்பு

(திருமலை)

யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முரணாக திருகோணமலை நகரில் பாடசாலைகளுக்கு அருகில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும் அவர்களை அகற்றுமாறு கோரியும், எதிர்வரும் திங்கட்கிழமை ஒரு நாள் பாடசாலைப் பகிஷ்கரிப்பை நடத்துமாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மாணவர் அமைப்பு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

திருகோணமலை நகரில் தற்போது இயங்குகின்ற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக மாவட்ட தமிழ் மாணவர் அமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பை முற்றுமுழுதாக விடுவித்து நிரந்தரமாகவே தக்கவைத்துகொள்ள முடியும்

### கட்டளைத் தளபதி கேணல் பானு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் எண்பது சதவீதமான பகுதி எமது கட்டுப்பாட்டிலுள்ளது. மக்களின் உணர்வெழுச்சியுடன் கூடிய போரொன்று நிகழுமானால் இந்த மாவட்டத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்திருக்கும் சுமார் ஐயாயிரம் வரையான சிறிலங்கா ஆயுதப்படைகளை வெளியேற்றி நிரந்தரமாகவே மட்டக்களப்பைத் தக்கவைக்க முடியும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட கட்டளை தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பினுடைய இணையத்தளமூடாக வாசகர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே இவ்வாறு கூறினார்,

வாசகர்களின் கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு,

கேள்வி.

மட்டக்களப்பின் காட்டுப் பகுதியில் ஒரு பக்கத்தை கருணா குழு தம்வசம் வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. சிறிலங்கா சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, அவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு அரசுக்கு இல்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். இதன் உண்மை நிலை என்ன?

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் மீது அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் நேற்று தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் ஒருவர் படையினரால் மிரட்டப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியில் இவர் தங்கியிருந்த வீட்டைச் சுற்றிவளைத்த படையினர் அவரைக் கடுமையான வார்த்தைகளால் மிரட்டியுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி-கனகபுரம் 10ஆம் பண்ணையில் உள்ள இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- எஸ். குகன் இல-104, 10 ஆம் பண்ணை. கனகபுரம்.

(6664)

### வெளிவந்து விட்டது

தேடலும் தெளிவும் - இதழ் 09 மிக சமீப கால விடயங்களுடன் தரம் ஐந்து முதல் அனைத்துப் போட்டிப் பரீட்சைகளுக்கும் சமகாலத்தின் தேவையை உணர்த்தும் அறிவுப் பேழையாகவும், 2005 அடிவரை தகவல்களை சுமந்து வெளிவந்துள்ளது. நாடு முழுவதும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். (6675)

### தவறிவிட்டது.

இராசேந்திரம் வீதன் என்பவரது நிரந்தர அடையாள அட்டை, நிரந்தர பயண அனுமதி அட்டை என்பன டிப்போ சந்திக்கும், குஞ்சுப்பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது கிளிநொச்சி காவல் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.(6674)

### வீடு வாடகைக்கு வழங்கப்படும்

(நிறுவனத்திற்கு மட்டும்)

சி. இரகுபதி இல. 1583 நான்காம் குறுக்கு இரத்தினபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். தொலைபேசி இல. 0777286194)

(6666)


# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முல்லைத்தீவில் கண் பரிசோதனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் அவுஸ்திரேலியா ஐ.சி.ஈ.ஈ. என்ற அமைப்பினரால் கண் பரிசோதனை செய்யப்பட்டு கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

மேற்படி சிகிச்சையானது கடந்த 24,25 ஆம் திகதிகளில் வட்டுவாகல், கள்ளப்பாடு, மணற்குடியிருப்பு ஆகிய கிராம மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது வட்டுவாகலில் 216 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு 174 பேருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, கள்ளப்பாடு தற்காலிக குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின்போது 300 பேருக்கு கண் பரிசோதிக்கப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. (20)

## குடிநீருக்குத் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இப்பகுதியில் மன்னார் நகரத்திலிருந்து குழாய் மூலம் பள்ளிமுனைக்குச் செல்லும் நீரின் வேகம் மிகமிகக் குறைவாக உள்ளதனால் அக்கிராமத்தில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. (18)


## நன்றி தெரிவிக்கின்றோம்

குமுழமுனை குன்றின் மேல் குமரன் ஆலயத்தில் 04-08-2005ஆம் திகதி சுமார் அறுபது ஆயிரம் ரூபா பெறுமதியான மின் உபகரணப் பொருட்கள் களவாடப்பட்டிருந்தன. இது விடயமாக முள்ளியவளை காவல்பணிமனை பொறுப்பாளர் ஜெயகரன் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். அவர் கரிசனையோடு உடனடியாக உரிய நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். இவ்வாறாக, 21.08.2005ஆம் திகதி பொறுப்பாளர் ஜெயகரன் தலைமையில் குமுழமுனை கிராமப் பொறுப்பாளர் ஜெயக்குமார், முள்ளியவளை கிராமப் பொறுப்பாளர் புலோமின் உட்பட அனைத்து காவல்துறை உறுப்பினர்களும் இணைந்து களவாடப்பட்ட பொருட்களை மீட்டுத் தந்தமைக்கு குமரன் ஆலய பரிபாலன சபையினர் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்வதோடு, குமரப் பெருமானின் அருள் பாலிப்பானாக.

ஆலய பரிபாலன சபை,
குமுழமுனை.

(சி-12620)


## தலைமன்னார் பியரில் முன்பள்ளிக் கட்டடம் திறப்பு

(மன்னார்)

தலைமன்னார் பியர் கிராமத்தில் மன்னார் வாழ்வோதயத்தினால் 15 இலட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட முன்பள்ளிக்கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் பிற்பகல் 3.00 மணியளவில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் அக்கிராமத்தைச் சேர்ந்த பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (18)

## வட்டுவாகல் பாலத்தில் உடைவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் நேற்று முன்தினம் உடைவு ஒன்று ஏற்பட்டதில் இரண்டு மணி நேரம் போக்குவரத்தில் தடை ஏற்பட்டது.

இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பாலத்தின் உடைந்த பகுதியைப் புனரமைத்து பயண ஒழுங்குகளை மேற்கொள்ள நடவடிக்கை செய்தனர்.

இப்பாதையினூடாகவே முல்லைத்தீவுக்கான முக்கிய போக்குவரவு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

## நிரந்தரக் கட்டடம் அமைக்க முன் அனுமதி பெறவேண்டும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமிக்குப் பின்னரான கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதியினை கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையில் பெற்ற பின்பே அமைக்க வேண்டுமென கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளர் இ. கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

அண்மைக்காலங்களாக அமைக்கப்பட்டு வருகின்ற நிரந்தரக் கட்டடங்களுக்கு இதுவரை அனுமதி பெறவில்லையெனவும், உடனடியாக அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (20)

## மன்னார் மாவட்டத்தில் சாரத் அனுமதிப்பத்திரம் வழங்கல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் 2002 ஆம் ஆண்டிலிருந்து இது வரையில் 3300 சாரதி அனு மதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 1500 பேருக்கு சகல வாகனங்கள் ஒட்டும் அனுமதிப்பத்திரமும் ஏனையோருக்கு உந்துருளி ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மோட்டார் போக்குவரத்துஆணையாளர் மன்னாரில் பத்து நாட்கள் தங்கியிருந்து இந்த சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கி வருகின்றார். அத்துடன் ஆண்டான் குளம், வெள்ளாங்குளம் போன்ற இடங்களுக்குசென்று நடமாடும் சேவைகளையும் மேற்கொண்டு வருகின்றார். (18)


### பெற்று கொள்ளவும்

லோகிதன் அம்பிகாபதி (இல. 811035530V) என்பவரது அடையாள அட்டையும், ஆசிர்வாதம் யோகராஜ் என்பவரது நிரந்தப் பயண அட்டையும் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.


## சனசமூக நிலையத்தின் செயற்பாட்டை முடக்கி வைத்துள்ள கிராம அலுவலர்

உரும்பிராய் மேற்குப் பகுதியில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றின் செயற்பாட்டை கிராம அலுவலர் முடக்கிவைத்திருப்பதனால் ஏனைய செயற்பாடுகளும் முடங்கியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கிராம அலுவலருக்கு எதிராக முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத்தின் தற்போதைய பெயரை மாற்ற வேண்டும் எனக் கூறி குறிப்பிட்ட சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளை கிராம அலுவலர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரும் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான விசாரணையை மேற்கொள்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு முன்செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்தகைய செயற்பாட்டின் காரணமாக சனசமூக நிலையத்தின் பலபுறச் செயற்பாடுகளும் பாதிப்படைந்துள்ளதாக நிர்வாகத்தினர் குற்றம் கூறுகின்றார்கள். (41)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## பொதுப்பட்டமளிப்பு 2005.10.06

கலாநிதி/முதுமாணி / டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 06-10-2005இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் பட்டங்கள் பெறத் தகுதி யுடையவர்கள் 15.09.2005இற்கு முன்னர் தமது வேண்டு கோளை விடுத்தல் வேண்டும்.

01) கலாநிதித் தேர்வு
02) முதுதத்துவமாணித் தேர்வு
03) கலை முதுமாணித் தேர்வு
04) பண்பாட்டியல் முதுகலைமாணித் தேர்வு
05) கல்வியியல் முதுமாணித் தேர்வு
06) பட்டப்பின் கல்வி டிப்ளோமாத் தேர்வு
07) பட்டப்பின் பொது நிர்வாக டிப்ளோமாத் தேர்வு
08) வைத்தியமாணி, சத்திர சிகிச்சை மாணித் தேர்வு
09) சித்தவைத்தியமாணி, சத்திர சிகிச்சை மாணித் தேர்வு
10) வணிகமாணித் தேர்வு
11) தொழில் நிர்வாகமாணித் தேர்வு
12) விஞ்ஞானமாணித் தேர்வு (பொது/சிறப்பு)
13) கலைமாணித் தேர்வு (பொது/சிறப்பு)
14) இசைக் கலைமணித் தேர்வு
15) விஞ்ஞான டிப்ளோமா தேர்வு
16) நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்) தேர்வு)
17) விவசாய விஞ்ஞானமாணித் தேர்வு
18) விஞ்ஞானமாணி(பிரயோக கணிதமும் கணித்தலும்)
19) விஞ்ஞான மாணி (சுற்றாடல் விஞ்ஞானம்)
20) தொழில் நிர்வாகமாணி (முகாமை கற்கைகள்)
21) தொழில் நிர்வாகமாணி (கணக்கியலும் நிதியும்)

(18–21: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம்.)

1) பட்ட/டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான வேண்டுகோள் படிவங்களையும் மற்றும் விபரங்களையும் வழமையான வேலை நேரங்களில் பின்வரும் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அ) உதவிப் பதிவாளர்,
தேர்வுகளும், அனுமதிகளும் கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

ஆ) சிரேஷ்ட உதவிப் பதிவாளர்,
வவுனியா வளாகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
வவுனியா.

2) பட்டப் பின்கற்கை நெறிகளுக்கான வேண்டுகோள் படிவங்களையும் மற்றும் விபரங்களையும் கீழ்வரும் அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

உதவிப் பதிவாளர்,
உயர் பட்டப் படிப்புக்கள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

(சி-12597)


# இருபத்தைந்து பட்டதாரிகளுக்கு திருமலையில் நேர்முகப் பரீட்சை

(திருகோணமலை)

வடக்குகிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகவும், திட்டமிடல் நிதி உதவியாளர்களாகவும் நியமிக்கப்படுவதற்காக மேலும் 25 பட்டதாரிகளின் பெயர்கள் கொழும்புக் கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இவர்கள் அனைவரையும் உடனடியாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்படியும் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சின் பணிமனையில் நடத்தப்படும் என்றும் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்தார்.

ஏற்கனவே, சுமார் 4000 பட்டதாரிகள், ஆசிரியர், திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர் பதவிகளுக்குரிய நேர்முகப் பரீட்சை இம்மாதம் மாவட்ட ரீதியாக வலயக் கல்விப் பணிமனைகளில் நடத்தப்பட்டது.

இப்பதவிகளுக்காக பரீட்சைத் திணைக்களம் நடத்திய பரீட்சையின் பெறுபேறுகளின்படியே புதிதாக மேலும் 25 பட்டதாரிகளின் பெயர்கள் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவர்களில் ஐந்து பேர் சிங்கள மொழி மூல பட்டதாரிகள் ஆவர். ஏனையோர் தமிழ்மொழி மூலப் பட்டதாரிகள் ஆவர்.

25பேரின் பெயர் விபரங்கள் வருமாறு,

யு. தரணி, சுமுறுபதி டச்சு வீதி அளவெட்டி, நூர்டின் புத்தூர். ஜன்ரின், 600 நெசவு நிலைய வீதி நிந்தவூர் - 19, ஆர். மாதுமை, 23/10, சிவன் வீதி, திருகோணமலை. எஸ். சுதாகர் 220, மின்சார நிலைய வீதி, திருகோணமலை, எம். அல்வினா / சிலாவத்தை, முல்லைத்தீவு, எம்.பி.சில்மியா பேகம் - 179, கிட்டங்கி வீதி, நிந்தவூர், எஸ். கோகுலன், சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம், குணநாதன் சுதர்ஸன் - 54B/ சிவன்கோவில் வீதி, தோணிக்கல் வவுனியா, ஆதம் ரோஷன் பேகம் 672, ஏபிசி, வீதி நிந்தவூர் - 19, ஏ. இளங்கோ - களுதாவளை, களுவாஞ்சிக்குடி,வி. குணாளன் களுதாவளை, களுவாச்சிக்குடி. எஸ். துஷியந்த் - பெரியகல்லாறு 01, கல்லாறு, மட்டக்களப்பு, எல்.ஏ. விமலகீர்த்தி 469/17 கெமுனுபுர, தம்பலகமம், பி.ஏ. ஜகைபுத்திக மே/பா பிளைட்லெபரிணைட் கருணாசேன இலங்கை விமானப்படை, எம்.ஏ.சி.பி. வெஹன்க, இலங்கை விமானப் படை, எம்.எம்.ஜே.நஷ்றி 76A, நெல்லித்தீவு, நிந்தவூர் - 24, ரி.கே. குணதாஸ 192/10, சங்கமித்தாரண மாவத்தை, கந்தளாய், பிரியந்தி எம்.ஏ. சி/174/1 கைத்தொழிற்பேட்டை, அம்பாறை, வி. மயூரன், மீசாலை வடக்கு, கொடிகாமம், எஸ். கவிதா சுழிபுரம் மேற்கு, சுழிபுரம், சத்தியா ஏ.பண்ணாகம் தெற்கு, சுழிபுரம், சுபலட்சுமி ரி. 105, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம், பாலச்சத்திரன், எஸ்.பி. சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு, அருட்செல்வம் ரி. வார்ட் 2, புங்குடுதீவு, யாழ்ப்பாணம், ஜே. ஜெகநாதன் (25)

# ஈராக்கில் இருந்து படை வாபஸ் இல்லை: மேலும் 1500 படையினர் அனுப்பப்படுவர்

-அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

**ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை வாபஸ்பெற்றால் அது மிகப்பெரிய தவறாகி விடும். கூடுதலாக ஆயிரத்து ஐந்நூறு படையினரை ஈராக்குக்கு அனுப்பிவைப்பேன், என்று அமெரிக்க சனாதபதி புஷ் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.**

ஆப்கான், ஈராக் ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா போர்தொடுத்த பின் சர்வதேச அளவில் நிலைமை மாறிவிட்டது. அமெரிக்கா, பிரிட்டனுக்கு எதிராகத் தீவிரவாதிகள் அவ்வப் போது பாரிய தாக்குதல்களில் ஈடுபடுகின் றனர். ஈராக்கில் இருந்து அமெரிக்கக் கூட்டுப்படைகள் வாபஸ்பெறவேண்டும். அதுவரை தாக்குதல் தொடரும். என்று தீவிர வாதிகள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். படைகளை வாபஸ்பெறுவது குறித்து பரிசீலிக்கும்படி அமெரிக்க சனாதிபதி புஷ்சிக்கு நெருக்கடிகள் அதிகரித்த வண்ணமுள்ளன.

இந்நிலையில் அமெரிக்க இராணுவத்தினர் மத்தியில் அதிபர் புஷ் பேசும்போது; ஈராக்கில் இருந்து படைகளை வாபஸ்பெறமுடியாது. நான் அதிபர் பதவியில் இருக்கும்வரை ஈராக்கில் அமெரிக்கப்படைகள் தங்கி இருக்கும் தீவிரவாதத்தை எதிர்த்து நாங்கள் தொடர்ந்து போரிடுவோம். அதில் வெற்றி பெறுவோம். படைகளை வாபஸ் பெறவேண்டும் என்று கூறுபவர்கள் தப்புக்கணக்குப் போடுகின்றனர்.

ஈராக்கில் தற்போது சுதந்திரம் கிடைத் துள்ளது. அங்கு சனநாயகம் மேம்பட்டு வருகி றது. இந்தச் சூழ்நிலையில் படைகளை வாபஸ் பெற்றால் தீவிரவாதிகளுக்கு அது சாதக கமாகிவிடும். ஈராக் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்க அமெரிக்கப் படையினரும் அவர்களது குடும்பத்தினரும் பல தியாகங்களைச் செய்தி ருக்கின்றனர். அந்தத் தியாகம் வீண் போகாது என அவர் தெரிவித்தார்.



ஈராக்கில் கொல்லப்பட்ட தனது மகன் ஜோன்கௌசின் நினைவுச் சிலுவையினைத் தொட்டவண்ணமுள்ள தாய் சின்டி சிகானும், அவரின் உருவப் படத்தை அணைத்தவாறு ஏனையோர் நிற்பதையும் காணலாம்.

## 12 பேர் சுட்டுக்கொலை

(பொகோட்டா)

கொலம்பியாவில் 12 பேர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பியா நாட்டின் மலைப்பகுதியிலும், காடுகளிலும் இருக்கும் 17 ஆயிரம் கம்யூனிஸ்ட்டு தீவிரவாதிகள் கடந்த 40 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடத்திவருகிறார்கள். அவர்களுக்கு கஞ்சாசெடிகள் மூலம் தான் பணம் கிடைக்கிறது. தங்களுடன் ஒத்துழைக்க மறுக்கும் கஞ்சா பயிரிடுவோரை சுட்டுக்கொல்வது அவர்களின் வழக்கம்.

இவர்கள் வால்டிவியா நகரில் கஞ்சா பயிரிட்டு வந்த 12 விவசாயிகளைச் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். இறந்தவர்களில் ஒருவர் பெண் ஆவார். கம்யூனிஸ்ட்டு தீவிரவாதிகளை ஒழிப்பதற்காக கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 15 ஆயிரம் கோடி ரூபாய் இராணுவ உதவியாக அமெரிக்கா கொடுத்துள்ளது.



அமெரிக்க கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஜீ.எல் கோவிங் பௌரகளில் இராணுவக் கல்லூரிகளில் பாதுகாப்புப்படையினரின் பிரச்சினைகள் பற்றி செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றுகின்றார்.


## பரீஸ்நகரில் பாரிய தீ விபத்து; 17 பேர் பலி; 30 பேர் காயம்

(பரிஸ்)

பிரான்சின் பரிஸ் நகரின் தென்பகுதியில் அமைந்துள்ள ஏழு மாடிக்கட்டடத்தில் நேற்றுப் பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது. இந்த அசம்பாவிதத்தில் சிக்கி 17 பேர் பலியாகி யுள்ளதுடன் 30 பேர் வரை காயமடைந் துள்ளார்கள்.

இறந்தவர்களில் சிறுவர்கள் அதிகமெனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். அங்கு குடியேற்ற வாசிகள் வாழ்ந்து வந்துள்ளார்கள் தாம்விட்ட தவறு காரணமாகவே தீ பற்றிக் கொண்டதாக பெண் ஒருவர் கூறியுள்ளார். அவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

தீ கொழுந்து விட்டெரிந்த சமயம் யன்னல் வழியாகக் குதித்து பலர் தமது உயிரைக் காப்பாற்றியுள்ளார்கள்.




வோஷிங்டனில் உள்ள வோஸ்ரர் ரீட் இராணுவ மருத்துவ நிலையத்தினுள் நுழை வாயிலினூடாக இராணுவ வீரர் ஒருவர் செல்கின்றார்.

## 13 முதலைகள் மாயம்

சீனாவில் உயிரியல் பூங்காவில் இருந்து காணாமல் போன 13 முதலைகளைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. முதலைகள் பற்றி தகவல் தெரிவிக்க தனித் தொடர்பாடல் வசதி உருவாக்கப்பட்டுள்ளது. சீனா தலைநகரம் பீஜிங்கில் இருந்து கிழக்கே 800 கி. மீ. தொலைவில் உள்ளது பென்ஸ்கி நகரம் இதற்கு அருகே உயிரியல் பூங்கா ஒன்று உள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் பூங்காவில் இருந்து 29 முதலைகள் திடீரெனக் காணாமல் போய் விட்டன. முதலைகளைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. காணாமல் போன வற்றில் 15 உயிருடனும், ஒன்று இறந்த நிலையிலும் கண்டு பிடிக்கப்பட்டதாக சீன பத்திரிகை ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.



பாக்தாத்தின் சதார்நகரில் ஈராக்கிய பாத்கட்சியின் எரிந்ததும் துப்பாக்கிரவைகளினாற் துளையிடப்பட்டதுமான அலுவலகத்தில் அயரேல்லா அலிசிஸ்ரானின் உருவப் படத்தையும், அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டு பதாகை ஒன்று தொங்கவிடப்பட்டுள்ளது.

## பாக்.இல் இருந்து துப்பாக்கிகள் கடத்தல் 17 பேர் மீது சீன நீதிமன்றில் விசாரணை

(பீஜிங்)

பாகிஸ்தானில் இருந்து நூற்றுக்கணக்கான துப்பாக்கிகள் மற்றும் உதிரிப்பாகங்களை கடத்தியதாக 17 பேர் மீது சீன நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மரணதண்டனை வரை வழங் கப்படலாம்.

சீனாவில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை தனிப்பட்ட வகையில் வைத்திருப்பது சட்டவிரோதமாகக் கருதப்படுகிறது. சீனாவில் திபெத் எல்லைப் பகுதியில் உள்ள மேற்கு மாகாண மான சிங்காய்ப் பகுதியில் ஆயுதக்கடத்தல் நடப்பது கண்டு பிடிக்கப்பட்டது. 900 துப்பாக்கிகள் மற்றும் ஆயிரத்து ஐந்நூறு உதிரிப்பாகங்களை பாகிஸ்தானில் இருந்து கடந்தியதாகப் 17 பேர் மீது வழக்குவிசாரணை ஆரம்பமாகியுள்ளது.

சீனாவின் சிங்காய் மாகாண தலைவர் ஜின்ஜியாங் ஆவார், இப் பகுதியில் கிழக்கு துர்கிஸ்தான் தனி மாகாணம் கேட்டு முஸ்லிம் கள் நீண்டகாலமாகப் போராடிவருகின்றனர். இவர்களை சீன அரசு தீவிரவாதிகள் எனப் பட்டியலிட்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. பாகிஸ்தானிலிருந்து இவர்களுக்காக ஆயுதம் கடத்தப்பட்டதா? என விசாரணை நடக்கிறது.

சீன அரசு இரும்புத்திரை பொருளாதாரக் கொள்கைகளைத் தளர்த்தி தாராளமயமாக்கலை அறிமுகப்படுத்தி வருகிறது. இதை விரும்பாத பழமைவாதிகள் வன்முறையைத் தூண்டு கின்றனர். இவர்களுக்காகத் துப்பாக்கிகள் கடத்தப்பட்டனவா? என்றும் விசாரணை நடக்கிறது. குற்றச்சாட்டுக்கள் நிரூபிக் கப்பட்டால் இவர்களுக்கு மரணதண்டனை வரை வழங்க சீன அரசியல் சட்டத்தில் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 11 மோசமான நிறுவனங்கள் கட்டாரில் இனம் காணல்

(டுபாய்)

இந்தியர்களை முறையாக நடத்தாத கட்டார் நாட்டைச்சேர்ந்த பதினொரு நிறுவனங்களை இந்தியத்தூதரகம் அடையாளம் கண்டுள்ளது. இந்த நிறுவனங்களை மோசமான நிறுவனங்கள் பட்டியலில் சேர்த்துள்ளது.

இது பற்றி டுபாயில் இருக்கும் இந்தியத்தூதரக அதிகாரிகள் தெரிவிக்கையில்:

கட்டாரில் உள்ள பொறியியல், கட்டுமர்னம், கட்டமைப்பு, ஆடைகள் தயாரிப்பு. ஆட்களை வேலைக்கு நியமிக்கும் நிறுவ னங்கள் உட்பட பதினொரு நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தில் வேலைபார்க்கும் இந்தியர்களை முறையாக நடத்தவில்லை என அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் அனைத்தும் இந்தியர்களை வேலைக்கு நியமிக்கும் முன்னரே அதற்கான அனுமதிபெற்றுவந்தன. அதற்கான முன்னுரிமையும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தியர்களை முறையாக நடத்தாததால் அந்த நிறுவனங்களுக்கான இந்தச்சலுகை மற்றும் உரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மோசமான நிறுவனங்கள் பட்டியலில் செய்யப்பட்டுள்ளன. அதே போல் மேலும் 35 நிறுவனங்களும் தீவிர கண்காணிப்பில் உள்ளன எனத் தெரிவித்தனர்.



பாக்தாத்தின் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் ஈராக்கிய சனாதிபதி ஜலல்தலபானி சுனி முஸ்லிம் தலைவர்களுடன் செய்தியாளர் மாநாடொன்றில் பங்குபற்றி உரையாற்றுகின்றார்.

# பனைகளை மீள் நடுகை செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை

## -பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர்கள் தெரிவிப்பு

(விசுவமடு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் போர்க்காலத்தில் படையினரால் அழிக்கப்பட்ட பனைகளுக்குப் பதிலாக மீள் நடுகை செய்வதற்கு பனை அபிவிருத்திச் சபை எந்தவிதமான நிதி ஒதுக்கீட்டையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் காவலரண்கள், பதுங்கு நிலைகள் என்பனவற்றை அமைக்க சிறிலங்காப் படையினரால் பெருமளவு பனைகள் அழிக்கப்பட்டன. இவற்றுக்குப் பதிலாக மீள் நடுகை செய்ய பனை அபிவிருத்திச் சபையால் நிதி ஒதுக்கீடு எதுவும் மேற் கொள்ளப்படவில்லை என சபை இணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பனை மீள் நடுகையை அரச சார்பற்ற நிறுவனங்களும், பொது நிறுவனங்களும், மேற்கொள்ளவேண்டுமென வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இதே வேளை பனம்பழம் பழுத்து விழும் இக் காலத்தில் பனை நடுகையில் பொது மக்கள் ஈடுபட வேண்டுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (46)



முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் துயர்துடைப்பு நிதியம் ஊடாக ஜேர்மனிய நாட்டு மக்களின் 2ஆம் கட்டநிதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட 14 மீனவர்களுக்கான படகுகளை வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் வழங்கியபோது (படம்: சகிலா)

# சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் பயிற்சி எழுத்துத் தேர்வில் சித்திபெற்றோருக்கு சான்றிதழ் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் பயிற்சிகளிலும் ,எழுத்துத் தேர்விலும் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் சிலர் சித்தி பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டியில் சித்திபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை முதல்வர் வ.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.



இதன்போது வன்னிமாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஆணையாளர் வே.சிறீதரன் கலந்து கொண்டு சிறப்பித்து கருத்துரைகளையும், சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். (கு)

# தமிழீழ நுண்கலைப்பிரிவு மல்லாவியில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நுண்கலைப் பிரிவின் மல்லாவி நுண்கலைக்கல்லூரி ஆரம்பவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை தமிழீழ நுண்கலைப் பிரிவுப் பொறுப்பாளர் க.கண்ணதாசனின் ஒருங்கமைப்பின் கீழ் நுண்கலைக் கல்லூரி அதிபர் சி.சிவசத்தியமோகன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கலவிளக்கினை மு/மல்லாவி மத்தியகல்லூரி முதல்வர் திருமதி பு.பாலசுப்பிரமணியம், மு/படிவம், 04 அ.த.க.பாடசாலை முதல்வர் அருமைநாயகம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை மல்லாவிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை மல்லாவி ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லப்பொறுப்பாளர் சசி ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நுண்கலைக்கல்லூரியின் பெயர்ப்பலகையினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் திரைநீக்கம் செய்தார். தொடர்ந்து பெற்றோர்கள், மாணவர்கள், கலைஞர்கள், ஆர்வலர்கள் மத்தியில் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்நிகழ்வில் கல்லூரி அதிபரின் தலைமையுரையினைத் தொடர்ந்து புலிகளின் குரலின் மல்லாவி வானொலிமன்றத் தலைவர் சு.சுபநேசன் வரவேற்புரை நிகழ்த்த தொடர்ந்து வாழ்த்துரையினைத் துணுக்காய் வலய முகாமைத்துவப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் கு.விஜயபாலா, மு/யோகபுரம் மகா வித்தியாலய முதல்வர் திருமதி. க.கிருஸ்ணபிள்ளை, செ. முகுந்தன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சிறப்புரை ஆற்றினார். சிறப்புரையினைத் தொடர்ந்து கல்லூரி நிர்வாக உத்தியோகத்தர் செ.மயில்வாகனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுற்றன. (கு)

## "தலைமைத்துவம்" பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனும் நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடனும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களில் ஒன்றான சமூக மட்ட குழுக்களை மேம்படுத்துதல் என்ற நோக்கோடு "தலைமைத்துவம்"எனும் தலைப்பில் கடந்த புதன்கிழமை காலை 10.00 மணிக்கு காஞ்சிபுரம் கிராமத்தின் முன்பள்ளியில் சமூக பொருளாதார அபிவிருத்திச்சங்கத் தலைவர் சு.சண்முகநாதன் தலைமையில் பயிற்சிநெறி நடைபெற்றது.

இப்பயிற்சிநெறியின் வளவாளர்களாக கிளிநொச்சி அரச செயலகத்தைச்சேர்ந்த சமூகஅபிவிருத்தி உத்தியோகத்தர் கேதீஸ்வரன், திட்டமிடல் உத்தியோகத்தர் அமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்கள். இதில் இக் கிராம மட்ட அமைப்புக்களைச்சார்ந்த 25 உறுப்பினர்கள் பயிற்சியில் பங்குபற்றி பயன் பெற்றுள்ளனர்.

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம் மாந்தை கிழக்குப் பிரேதேச செயலர் பிரிவில் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு பாண்டியன்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சி.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.


இதன் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை நட்டாங்கண்டல் மகப்பேற்று மருத்துவமனை வைத்திய அதிகாரி எஸ்.பி.நடராஜா ஏற்றிவைக்க, தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை பாண்டியன்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இலக்கியன் ஏற்றிவைத்தார். வரவேற்புரையை பாண்டியன்குளம் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் எஸ்.பர்மானந்தம் நிகழ்த்தினார். கருத்துரைகளை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், பிரதேசதேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.தணிநாயகம், சி.இலக்கியன், தூயவன்அரசறிவியல் கல் லூரி பொறுப்பாளர் பார்த்தீபன், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத் துரைவழங்க, சிறப்புரையை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பா ளர் செ.முகுந்தன் ஆற்றினார். இந் நிகழ்வில் கிராம அபிவிருத்திச்சங் கம், மாதர்சங்க பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள் பொதுமக்கள், போராளிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.(24)

# குமுழமுனைப் பிரதேச ஆறுமுகத்தான்குளம் கிராம அபிவிருத்தி வேலைகள் ஆரம்பம்

(முள்ளியவளை)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்டத்தின் கீழ் குமுழமுனைப் பிரதேசத்திற்குட்பட்ட ஆறுமுகத்தான் குளம் கிராமஅபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லை.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆலோசனைக்கமைவாக பயனாளிகள் இனங்காணப்பட்டு, அப்பகுதியின் அத்தியாவசிய தேவைகள் இனங்காணப்பட்டு, நிகொட்திட்ட நிதியுதவியுடன் பயனாளிகளுக்கு நிரந்தர வீடு அமைத்தல், பொதுக்கிணறு அமைத்தல், பொதுமலசல கூடம் அமைத்தல், வீதிப்புனரமைப்பு என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஆ)




கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது சேதமான நாயாற்றுப்பாலம் இன்றுவரை புனரமைக்கப்படாத நிலையிலுள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:-சகிலா)

# வவுனியா காத்தார்சின்னக்குளம் கிராம அலுவலர் மீது கொலை முயற்சி

(வவுனியா )

வவுனியா காத்தார் சின்னக்குளம் கிராமசேவை அலுவலர் சிறிக்காந்தனை கொலை செய்ய முயற்சிக்கப்பட்டதாக அவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக மட்டுப்படுத்தப்பட்ட வேகத்தினை மீறி செலுத்தப்படும் வாகனங்களை தமிழீழ காவல்துறை நகரப்போக்குவரத்துப்பிரிவினர் தடுத்து நிறுத்தி போக்குவரத்து விதி குறித்து எடுத்துக் கூறுவதனைப் படத்தில் காணலாம். (படம்:-சோதி)

கடந்த திங்கட்கிழமை இரவு 12.00 மணியளவில் மேற்படி கிராம சேவை அலுவலரின் வீட்டிற்கு சென்ற மூன்று ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் அவரது வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்து கிராமசேவை அலுவலரை தேடியதாகவும் அங்கு அவர் இல்லாமையால் அவரது மனைவியை அச்சுறுத்திவிட்டு கிராமசேவை அலுவலரின் தந்தை வீட்டிற்கு சென்று அங்கும் அத்துமீறி பிரவேசித்து அவரைத்தேடியதாகவும் அவர் வவுனியா பொலிஸ் நிலைய முறைப்பாட்டுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆயுதங்களுடன் உள் நுழைந்த இளைஞர்கள் கறுப்புத் துணியால் வாயைக்கட்டி இருந்ததாகவும், அவர்கள் தன்னை கொலை செய்யப்போவதாக மனைவியிடம் தெரிவித்திருந்ததாகவும் தனது தந்தை வீட்டிலும் தன்னைக்காணாமையால் ஆத்திரமடைந்த ஆயுததாரிகள் தனது தாய், தந்தை அணிந்திருந்த ஏறத்தாழ 20 பவுண் தங்கஆபரணங்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.(10)

# மன்னார் விவசாய அமைப்புக்களுக்கு இரண்டு இலட்சம் பெறுமதியான அறுவடை இயந்திரங்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள விவசாய அமைப்புகளிற்கு நிகொட்திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான 19 அறுவடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை மன்னார் கச்சேரியில் வைத்து மன்னார் கமநல் உதவிஆணையாளர் வழங்கினார்.

இதன்மூலம் விவசாயிகள் பெரும்போகம், சிறுபோகத்தின்போது நல்லபலனை எதிர்பார்க்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (18)

# வீட்டினுள் திடீரென நுழைந்து கல்வயலில் படையினர் சோதனை!

(தென்மராட்சி)

**சாவகச்சேரி கல்வயல் பகுதியில் சண்முகானந்த வீதியில் அமைந்துள்ள நகரசபை உத்தியோகத்தர் ஒருவருடைய வீடு கடந்த புதன் மதியம் 12.30 மணியில் இருந்து இரண்டு மணிவரை இரண்டு வாகனங்களில் வந்த முப்பதிற்கும் மேற்பட்ட படையினரால் திடீரென சோதனையிடப்பட்டது.**

அச்சமயம் படையினர் திடீரென வீட்டிற்குள் நுழைவதைக்கண்ட உத்தியோகத்தரின் மனைவியும் மகளும் பாதுகாப்புக் கருதி அயல் வீட்டிற்கு ஓடிச் சென்று விட்டதாகவும், படையினர் வீட்டினுள் இருந்த பொருட்களை கிளறி ஒன்றரை மணித்தியாலயத்திற்கும் மேலாக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. படையினரின் இத்தகைய நடவடிக்கையால் இப்பிரதேசமே அதிர்ச்சிக்குள்ளாகி இருப்பதுடன் இப்பகுதியில் பெரும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது. இது குறித்து இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடொன்று பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மூலம் செய்யப்பட்டுள்ள தாகத் தெரியவருகிறது. (28)

## தென்மராட்சிப் பகுதியில் 210 வீடுகள் அமைக்கத்திட்டம்

(தென்மராட்சி)

உலக வங்கியின் உதவியுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் 210 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

போரினால் தென்மராட்சிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட, வீடுகளை இழந்த மக்களுக்கு இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதன் படி நூற்றிஐம்பது வீடுகள் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களிலும், அறுபது வீடுகள் ஏனைய பிரதேசங்களிலும் அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளில் தென்மராட்சி பிரதேச செயலகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. (28)

## சமூகவிரோதச் செயலில் ஈடுபடுவோருக்கு தீவகத்தில் எச்சரிக்கை சுவரொட்டிகள்

(தீவகம்)

யாழ். குடாநாட்டின் தீவகப் பகுதிகள் எங்கும் தீவகநலன் பேணும் அமைப்பினரால் எச்சரிக்கைச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவருகிறது. இச்சுவரொட்டிகளில் சமூகவிரோத செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவோர், பாலியல்துஷ்பிரயோக நடவடிக்கைகள், கடத்தல், கொள்ளை, கொலை, கள்ளச் சாராயம் , விபச்சாரம், பெண்களிடம் சேட்டைகள்புரிவோர், மற்றும் இனவாதப்படைகளின் கைக்கூலிகளாகச்செயற்படுவோரையும் கடுமையாகக்கண்டிக்கும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள்தீவகத்தின் பகுதிகள் அனைத்திலும் ஒட்டப்பட்டுள்ளன. (28)

## யாழ் .மாவட்ட நீதவான்களை சமாதானசெயலக குழு சந்தித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சட்டம், ஒழுங்கை சீராகப் பேணுவதன் மூலம் சமாதான நடவடிக்கையினை உரிய முறையில் முன்னெடுப்பது பற்றி யாழ். மாவட்ட நீதவான்களை அரச சமாதான செயலக உயர்மட்டக் குழுவொன்று நேற்று முன்தினம் சந்தித்துப்பேச்சுக்களை நடத்தியுள்ளது.

குடாநாட்டிற்கான விஜயமொன்றினை மேற்கொண்டு நேற்று முன்தினம் வருகைதந்திருந்த அரச சமாதான செயலகப் பிரதிநிதியும் சட்டவரைவு ஆணையத்தின் பணிப்பாளருமான கலாநிதி லக்ஷ்மன் குமாரசிங்க மற்றும் துணை சட்டவரைவு ஆணையாளர் திருமதி நிரோஜா நிமலசூரிய ஆகிய இருவருமே யாழ். நீதிமன்றிற்கு விஜயம் செய்து பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகி சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக நீடித்த இச்சந்திப்பில் யாழ். நீதவான் இ.த.விக்னராஜா மேலதிக நிதவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அண்மையில் இணுவில் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையும் அதையடுத்து ஏற்பட்ட வன்முறைகளில் பொலிஸ் அதிகாரியொருவர் கொல்லப்பட்ட சம்பவத்தையும் அடுத்து குடாநாட்டின் சட்டம், ஒழுங்கு மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக சந்திப்பின் போது உரையாடப்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான அசம்பாவிதங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவதென இச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப் பட்டுள்ளது. (27)

## நல்லூர் ஆலய திருவிழாவின் வீதித்தடை நடைமுறை

நல்லூர் கந்தனின் உற்சவம் ஆரம்பமாகியதிலிருந்து தடைமுகாம்களைப் பராமரிப்பதில் எதிர்கொண்ட அசௌகரியங்கள் மற்றும் இடையூறுகளைக் கருத்திற் கொண்டு நேற்று முதல் எதிர்வரும் மூன்றாம் திகதி வரையான காலப்பகுதியில் வீதித்தடைகளின் அமுலாக்கம் பின்வரும் ஒழுங்கில் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதித்தடைகள் யாவும் குறிப்பிட்ட நேரம்வரை தளர்த்தப்படாது அமுல்படுத்தப்படும்.

வியாபாரப் பொருட்கள்விற்போர் பிற்பகல் 1.00 மணி தொடக்கம் 3.00 மணிவரையும் தமது அடையாள அட்டையையும், ஆலயச்சூழலில் வியாபாரம் செய்வதற்காக மாநகராட்சி மன்றத்திற்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டையும், தடைமுகாம் பொறுப்பாளர்களிடம் சமர்ப்பித்து உள்ளே வருவதற்கான அனுமதியைப் பெறமுடியும்.

தடைமுகாம்களில் உள்ளே நிரந்தரமாக வதிபவர்களும், ஆலயச்சூழலில் இடம்பெறும் விசேடநிகழ்வுகளில் பங்குகொள்ளும் கலைஞர்களும் நிலைமைக்குத் தக்கவாறு மாற்று ஒழுங்குகளை மேற்கொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்நடைமுறை பற்றிய மேலதிக விபரங்களை நல்லூர் இந்து விடுதியில் அமைந்துள்ள உற்சவ காலப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

சூழலில் அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு இத்தகைய நடைமுறைகள் அவசியமாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரங்காலய 11ஆவது நிகழ்வு

யாழ்ப்பாணம் பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் மாதந்தோறும் பெண்களுக்காக நடாத்தப்பட்டுவரும் அரங்காலயம் 11ஆவது நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு யாழ். கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியால யத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மராட்சி மருதங்குளம் பாடசாலை இராணுவ ஆக்கிரமிப்பினுள் செல்லும் அபாயம்

(தென்மராட்சி)

மருதங்குளம் பாடசாலை மீண்டும் இராணுவ ஆக்கிரமிப்பினுள் செல்லும் அபாயம் தோன்றியுள்ளதாக பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எழுதுமட்டுவாள் மருதங்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை கடந்த ஓராண்டுக்கு முன்னர் இப்பிரதேச மக்களால் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து போராட்டத்தின் மூலமாக மீட்கப்பட்டது இவ்வாறு மீட்கப்பட்ட இப்பாடசாலைக்கு கட்டடங்களைப் புனரமைத்த பின்னர் பாடசாலை மீள் இயக்கப்படும் என்று தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர்.

ஆனால் கட்டடங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்ட நிலையில் பாடசாலையை இயக்குவதற்கு சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எதனையும் எடுக்க வில்லை என்றும் இதனால் பாடசாலை இருந்த பகுதி மீண்டும் இராணுவ ஆக்கிரமிப்பினுள் செல்லும் அபாயம் தோன்றியிருப்பதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## முதுபெரும் தமிழறிஞர் சிவராமலிங்கம் பிள்ளை காலமானார்



(யாழ்ப்பாணம்)

முதுபெரும் தமிழறிஞரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் உப அதிபருமான எஸ். சிவராமலிங்கம்பிள்ளை நேற்று முன்தினம் காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது எண்பது

அகில இலங்கை கம்பன் கழகத்தை உருவாக்கியதுடன் பல கல்விமான்களையும் இலக்கிய வாதிகளையும் உருவாக்கியுள்ளார். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் ஆசிரியராக இவர் பணியாற்றி உள்ளார்.

ஓய்வு பெற்ற பின்னர் கலை, இலக்கிய பணிகளுடன் சமூகப்பணிகளிலும் ஈடுபட்டவர்.

நோய்காரணமாக இவரது இரண்டு கால்களும் செயலிழந்த போதும் தமிழுக்கும், சைவத்திற்கும், இலக்கியத்திற்கும் இவர் தொடர்ந்து பணியாற்றினார்.



செம்மலை அளம்பில் மத்திய மருந்தகத் திணை வைத்தியகலாநிதி ஜி. தர்மேந்திரா திறந்து வைக்கின்றார். இந் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. (படம்:- சகிலா)



முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களில் மண்வளம் பேணல் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்ட பரிசோதனைத் துண்டத்தை விவசாயிகள் பார்வையிடுகின்றனர். (படம்:- சகிலா)

## பயிற்சி வகுப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இதுகாலவரையில் சமூக பாதுகாப்பு சூழல் பராமரிப்பு நிறுவனம் 150 இளம் யுவதிகளுக்கு தையல் பயிற்சியை வழங்கி அவர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இப் பயிற்சி நெறியானது கொழும்பில் வைத்து வழங்கப்பட்டதாகும். இக் குடும்பங்களின் பொருளாதாரத்தில் தற்போது முன்னேற்றம் காணப்படுவதாக மன்னார் மனித நேயங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (18)



கடந்த 21 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு கோவில் குடியிருப்பு பகுதியில் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேள்ட்விசன் நிறுவனத்தின் நிதி உதவியில் பயன்தரு வீட்டுத் தோட்ட மரக்கன்று வழங்கும் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் மங்கலவிளக்கினை ஏற்றுகின்றார். (படம்:- சகிலா)

## கமக்கார அமைப்பு குமரபுரத்தில் தெரிவு

(கண்டாவளை)

பரந்தன் குமரபுரம் கிராமத்தில் புதிய கமக்கார அமைப்பு தெரிவும் பொதுக் கூட்டமும் நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் பரந்தன் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் வின்சன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கமக்கார அமைப்பு தலைவராக ந.மகேந்திரன், செயலாளராக க.ஸ்ரீ பாஸ்கரலிங்கம், பொருளாளராக நா.மகேஸ்வரன், உபதலைவராக கீ. யோ.லோசலீன், உப செயலாளராக சு.கயல்விழி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு மேலும் ஐந்து நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர். (14)

## தலைமைத்துவ பயிற்சி

(முள்ளியவளை)

முல்லை•மாவட்ட தமிழர் புனர்வாழ்வு கழக அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்டத்தின் கீழ் குரவில் கிராமத்தில் நேற்று முன்தினம் தொடக்கம்தலைமைத்துவ பயிற்சி பட்டறை இடம் பெற்று வருகின்றது.மேற்படி கிராமத்தில் உள்ள பொது அமைப்புச் சார்ந்தவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்குமான தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை குரவில் பொதுநோக்கு மண்டபத்தில் தொடர்ந்து 14 நாட்களுக்கு பி.ப 2.00மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை இடம் பெற்று வருகின்றது. தலைமைப் பயிற்சிப்பட்டறையில் துறை சார்ந்த பெரியோர்கள் பயிற்சி கருத்துக்களை வழங்கி வருகின்றனர். (அ)


# பாலங்களின் தரத்தை அறிய நவீன கருவி

பாலங்கள் இடியும் முன்பே கண்டறியும் நவீன கருவிகளை புதிய பாலங்களில் பொருத்த வேண்டுமென்று இந்திய தொழில் நுட்ப விஞ்ஞானி தெரிவித்துள்ளார். இந்தியா வின் காரைக்குடி மின் வேதியியல் ஆய்வக இயக்குனர் எம். ராகவன் மின்வேதியியல் துறையில் ஏற்பட்டிருக்கும் நவீன மாற்றம் குறித்து மின்வேதியியல் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றக்கழகம் மற்றும் காரைக் குடிமையமின் வேதியியல் ஆய்வகம் ஆகிய இரு அமைப்புகளும் மின் வேதியியல் விஞ்ஞா னம் மற்றும் தொழில் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்ற தலைப்பில் இரண்டு வருடத்துக்கு ஒரு முறை சர்வதேச கருத்தரங்கு நடத்து கிறது. அதில் மின் வேதியியல் ஆய்வளவில் தான் இருக்கிறது. அதை வர்த்தக ரீதியில் எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து விவாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஐதரசன், ஒட்சிசன் ஆகியவற்றைச் சேர்த்தால் மின்சாரம் கிடைக்கும் அது சிறிய அளவில் தான் இப் போது செய்ய முடியும். விண்கலத்தில் இந்த முறையில் மின் சாரம் பெறப்படுகிறது விண்கலத்தில் ஒட்சிசன் மற்றும் ஐதரசன் ஆகியவற்றை எடுத்துச் செல் கிறார்கள். தேவைப்படும் போது அவற்றைச் சேர்த் து மின் சக்தியைப் பெறு கிறார்கள். பின்னர் இரு வேதிப் பொருட்களும் இணைவதால் தண்ணீர் கிடைக்கிறது. அதை குடிக்க பயன்படுத்து கிறார்கள். எனவே அது போல் பூமியிலும் இரு வேதிப் பொருட்கள் மூலம் மின்சாரம் தயாரிக்க முடியுமா? என ஆய்வு செய்யப்படுகின் றது. அதேபோல போக்கு வரத்துக்குப் பயன்படும் பாலங்கள் கட்டி பல ஆண்டுகளாகிவிட்டால் அதில் பயன்படுத் தப்பட்ட வேதிப் பொருட் கள் செயலிழந்து போய் விடும். அதனால் பாலம் இடிந் துவிடும். அது போல திடீரென பாலங் கள் இடிவதால் பெரிய அளவில் சேதம் ஏற்படுகிறது. எனவே அது போன்ற பாலங்களைச் சோதித்து அதன் திறன் எப்படி இருக் கிறது எனத் தெரிய வேணடும். அதை வைத்து பாலத்தை சீர்படுத்தலாம், அல்லது போக்குவரத்தை நிறுத்தினால் சேதம் குறையும். பாலம் கட்டும் போது நவீன கருவிகளை பொருத்த முடியும் அப்படிச் செய் துவிட்டால் கட்டுமான அறையில் இருந்தவாறே பாலம்என்ன தரத்தில் இருக்கிறது எனத் தெரிந்து கொள்ளலாம். அதை வைத்து பாலத் தைசீரமைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பொது அறிவு

- உலகில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகமாக காணப்படும் நாடு
  ➡ சுவீடன்.
- ஐக்கிய நாடுகள் சபையின் முதல் கூட்டம் நடைபெற்ற இடம்
  ➡ லண்டன்
- உயிரினங்களில அதிகளவில் முட்டையிடுவது
  ➡ கறையான்
- பறவைகளில் மிகவும் வேகமாக நீந்தும் பறவை
  ➡ பெங்குயின்
- அவுஸ்திரேலியாவில் உள்ள அதிசய விலங்கு
  ➡ கங்காரு
- மிகப்பெரிய பாலூட்டி
  ➡ திமிங்கலம்
- மோப்பசக்தி கூடிய உயிரினம்
  ➡ விலாங்கு மீன்
- உலகிலே ஏழு குன்றுகள் கொண்ட நகரம்
  ➡ ரோம்
- குரைக்கத் தெரியாத நாயின் பெயர்
  ➡ டெக்கே( அவுஸ்திரேலியா)

மேரி பிலுசியா மொறாயிஸ்,
வங்காலை.



ஜப்பானின் பிரபல இலத்திரனியல் நிறுவனமான கனோன் நிறுவனம் தனது முதலாவது DVD ஒலி, ஒளிப் பதிவுசாதனத்தை வெளியிட்டுள்ளது. இது 4.05–40.5mm /1.8–2.8கு உருப் பெருக்கும் வில்லை கொண்ட ஒருமணித்தியால தொலைக்காட்சிப்பதிவுகளை மேற்கொள்ளத்தக்கது.

# முதுமை எப்படி ஏற்படுகிறது?

பொதுவாக மனிதர்களைப் பொறுத்தவரை முதுமை என்பது ஒரு தவிர்க்க முடியாத பருவம். இருப்பினும் வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் உதவியுடன் முதுமையை தள்ளிப் போடவும் தவிர்க்கவும் முடியுமா? என்ற ரீதியில் ஆய்வுகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் மனிதனுக்கு வயதாவதற்கு அல்லது முதுமை வருவதற்கு காரணம் என்ன? என்பதை கண்டுபிடித் துள்ளனர்.

வளி மண்டலத்தில் நம்மைச் சுற்றிலும் கண்ணுக்குத் தெரியாத தூசுகள் எப்படி சுற்றிக் கொண்டிருக்கிறதோ அதேபோல நம் உடம்புக்குள்ளும் எதற்கும் கட்டுப்படாத ஏராளமான, சுதந்திர துகள்கள் சுற்றி வருகின்றன. இந்த துகள்கள் உடம்பில் உள்ள செல்களைத் தாக்கி அவற்றின் இயக்கத்தைப் படிப்படியாக முடக்குவதால் நாளடைவில் அவை நோய்வாய்ப்படுகின்றன. மனிதனுக்கு வயதாவதற்கு இதுதான் காரணம்.

ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட எலிகளுக்கு சுதந்திர துகள்களை அழிக்க உதவும் நொதியங்கள் கூடுதலாக கொடுக்கப்பட்ட போது, அந்த குறிப்பிட்ட எலிகளின் ஆயுட்காலம் 20 சதவீதம் அதிகமானது கண்கூடாக தெரிய வந்தது. அதுபோல மேற்படி எலிகளின் இருதய ஆரோக்கியமும் நன்றாக இருந்தது. இந்த ஆய்வின் மூலம் தன்னிச்சையான சுதந்திர துகள்களின் இயக்கத்தைப் கட்டுப்படுத்தும் பட்சத்தில் வயதுக்கே உரித்தான நோய்களைத் தடுப்பதன் மூலம் மேலும் கூடுதலான வருடங்கள் உயிர் வாழ முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

# குழந்தைகளின் அசைவுகளுக்கு அர்த்தம் காணும் நவீன கருவி

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பான் பொம்மைகள் தயாரிப்பு நிறுவனம் நவீன தொழில் நுட்ப முறையில் ஒரு அரிய கருவியை தயாரித்தது. இதன் மூலம் நாய்களின் முனகல் சத்தம், சிறு ஒலி வகைகள் முகம் மற்றும் உடல் அசைவுகள் ஆகியவற்றிற்கு என்ன அர்த்தம் என்று கண்டறிய முடியும். இப்போது இதே போல் ஜப்பான் நிறுவனம் ஒன்று பச்சிளம் குழந்தைகளின் பலவித அழுகைகள், சப்தங்கள்,ஒலிவகைகள் முகம் கை கால் அசைவுகள் மற்றும் உடல் சீதேஷ்ண நிலை மாறுபாடுகள் மூலம் குழந்தைகளின் விருப்பங்கள் மனவோட்டங்கள் ஆகியவைகளை அறிந்து விளக்க சில நவீன கருவிகளை தயாரித்து வருகிறது. உதாரணமாக குழந்தை கண் இமை அசைவுகள் அதன் மூக்கின் நுனியில் இருந்து கண் இமை நெளிவு சுழிவுகள் எவ்வளவு நெருங்கி அல்லது விலகி உள்ளன. குழந்தை முகத்தில் உடல் உஷ்ண மாறுபாடுகளுக்கு தகுந்தபடி எவ்வளவு நிறம் மாறுகிறது. அதன் பொருள் என்ன என்பன பற்றி நமக்கு உணர்த்த இந்தக் நவீன கருவிகளால் முடியும். இன்னும் சில காலத்தில் இந்தக் கருவிகள் சந்தையில் விற்பனைக்கு வந்து விடும் என்று கூறப்படுகிறது.



இப்படத்தில் காணப்படும் வாகனம் தனிநபர் பாவிப்புக்கு மட்டும் உருவாக்கப்பட்ட மின்னியல் வாகனமாகும் இது "1-unit" என பெயரிடப்பட்டுள்ளது. இது முற்றுமுழுவதும் விஞ்ஞான தொழிநுட்ப முறையில் தயாரிக்கப்பட்டது.

# பேன்

மனிதர்களில் ஒட்டிஉண்ணும் பேன் இனங்கள் இரு வகைப்படும். ஒன்று பெடிகுளுஸ்(pediculus) மற்றையது திருஸ் (phthirus)என்பன வாகும். பெடிகுளுஸ் இன பேன் மனித உடலில் தொற்றிவாழும். அவ் வகையைச் சேர்ந்த ஹியுமனஸ் கெப்பிடீஸ் (humanusCapitis) தலைமயிரில் காணப்படும் கெப்பரிஸ் என்ற இனப் பேன் ஆடைகளில் தொற்றி இருந்து மனித இரத்தத்தைக் குடிக்கும். திருஸ்புவிஸ் என்ற வகையிலான பேன் உடலில் உரோமங்களில் தொற்றியிருக்கும்பெடிகுளுஸ் பேனின் தலையில் கண்களும் உணர்கொம்புக்களும் காணப்படும். இது தலைமயிரில் காணப்படும் பேன் வகையிலிருந்து வேறுபடும். இதன் உணர் கொம்புகள் நீளமானவை. வயிறு ஏழு பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டிருக்கும் பெண் இனம் ஆண் இனத்தைவிட சற்று நீளமானது. அதன் நீளம் 2.4 மி.மீற்றர் முதல் 3.8 மீற்றராகும். பொதுவாக பேனின் முட்டை ஒரு மில்லிமீற்றர் நீளம் உடையது. பேன் மனித உடலில் இரத்தத்தை உறிஞ்சி வாழும். அது மனிதனின் தோலை தன் ஊசி போன்ற உறுப்பினால் குத்தி இரத்தத்தை உறிஞ்சும். அவ்வாறு அது துளையிடும் போது எமக்கு கடினமாக வலியெடுக்காமைக்கு பேன் அவ்விடத்தில் உமிழ்நீரை சுரப்பதே காரணமாகும்.

# தொடர்ந்து மீன் சாப்பிட்டால் மாரடைப்பைத்தடுக்கலாம்

தொடர்ச்சியாக மீன் சாப்பிடுபவர்களுக்கு மாரடைப்பு, பக்கவாதம். 'புரோஸ்டேட், புற்று நோய், நினைவாற்றல் பாதிப்பு ஆகிய பிரச்சினைகள் வயதான காலத்தில் ஏற்படாமல் தடுக்கப்படும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளனர். இதற்கெல்லாம் மீன் உணவில் காணப்படும் ஒமேகா-3 என்ற அமிலம் தான் காரணம். வயிற்றில் இருக்கும் சிசுவில் தொடங்கி, மனிதனின் பல்வேறு கால கட்டங்களிலும் முக்கிய தேவையாகக் கருதப்படும் ஒமேகா-3 அமிலம் மீனில் தான் அதிகமாக காணப்படுகிறது. இதுதவிர சீலேனியம், ஆண்டி ஆக்சிடென்டுகள் மற்றும் புரோட்டீன் ஆகியவையும் கணிசமாக காணப்படுகின்றன. மீன் உணவை அதிகமாக சாப்பிடுபவர்கள், உடம்புக்கு கெடுதல் செய்யும் இதர மாமிச உணவுகள் மற்றும் கொழுப்புப் பொருட்களை குறைத்துக் கொள்வார்கள் என்பது மற்றொரு நன்மை ஆகும்.

அதே சமயம் கர்ப்பிணிப் பெண்களும், குழுந்தைகளும் மீன் உணவை அளவோடு சாப்பிடுவது நல்லது. ஏனெனில் சில மீன்களில் பாதரசம் அதிகமாகக் காணப்படும். மூளை பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு உடல் பிரச்சினைகளுக்கும் இது காரணம் என்பதால் குறிப்பிட்ட இத்தகைய மீன்களைத் தவிர்ப்பது நல்லது. ஒருவேளை தவிர்க்க முடியாத நிலையில் இந்த வகை மீன்களை தோல் நீக்கி விட்டு சமைப்பது பாதிப்பை ஓரளவுக்கு குறைக்கும்.



தைபெய் சர்வதேச தொலைத் தொடர்பும் வலையமைப்பும் என்ற வருடாந்தகண் காட்சியில் ஒரு தாய்வான் பெண்மணி இறுதியாக வெளிவந்த இணையத் தொலைபேசியை அறிமுகப்படுத்துகிறார். இங்கு 106 நிறுவனங்கள் பங்குபற்றி 470 வகையான தயாரிப்புக்களைக் காட்சிப்படுத்தின.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

### மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/கோ/3022 திரு. மார்க்கண்டு துரைராசா
யா/கோ/3024 திரு. சின்னத்தம்பி விக்னேஸ்வரன்
யா/கோ/3031 திரு. வேலு அப்புக்குட்டி
யா/கோ/3033 திரு. தம்பையா அருணாசலம்
யா/கோ/3034 திருமதி. அன்னபரிபூரணி இராகவன்
யா/கோ/3037 திரு. வைத்திலிங்கம் அழகரத்தினம்
யா/கோ/3044 திரு. சின்னத்துரை பாலசுப்பிரமணியம்
யா/கோ/3054 திருமதி. இரதிதேவி இந்திரராசா
யா/கோ/3071 திருமதி. காந்திமதி இராஜகோபால்
யா/கோ/3084 திரு. வல்லிபுரம் கிருஸ்ணராசா
யா/கோ/3085 திருமதி. கமலம் நடேசலிங்கம்
யா/கோ/3093 திரு. முத்துக்குமாரு குமாரசந்திரன்
யா/கோ/3095 திரு. சுப்பையா குமாரவேல்
யா/கோ/3103 திரு. அரியகுட்டி லோகநாதன்
யா/கோ/3104 திருமதி. லிங்காஜெனி கந்தப்பிள்ளை
யா/கோ/3114 திரு. கணபதி மருதலிங்கம்
யா/கோ/3121 திரு. காசிப்பிள்ளை மயில்வாகனம்
யா/கோ/3124 திரு. நாகமுத்து மகாலிங்கம்
யா/கோ/3133 திரு. ஞாவுக்குட்டி நடராசா
யா/கோ/3135 திரு. கந்தையா நடராசா
யா/கோ/3136 திரு. சடையன் நாகலிங்கம்
யா/கோ/3139 திரு. கிருஷ்ணபிள்ளை நித்தியானந்தன்
யா/கோ/3147 திரு. கந்தையா புஸ்பரத்தினம்
யா/கோ/3149 திரு. சீனிவாசகம் பரமானந்தன்
யா/கோ/3162 திருமதி. பராசக்தி நவரத்தினசிங்கம்
யா/கோ/3165 திருமதி. பூரணம் சின்னத்தம்பி
யா/கோ/3167 திரு. வெற்றிவேலு பூபாலசிங்கம்
யா/கோ/3177 திருமதி. இராஜேஸ்வரி இராசநாயகம்
யா/கோ/3178 திரு. சின்னத்தம்பி இராசரத்தினம்
யா/கோ/3179 திருமதி. இரத்தினம் அப்பையா
யா/கோ/3182 திரு. அன்னப்பா இராசப்பா
யா/கோ/3189 திரு. கார்த்திகேசு இரத்தினம்
யா/கோ/3197 திரு. செல்லப்பா சிவசோதிராஜா
யா/கோ/3201 திரு. பொன்னுத்துரை சண்முகசுந்தரம்
யா/கோ/3228 திரு. மாரிமுத்து சிவசுப்பிரமணியம்
யா/கோ/3230 திரு. வெற்றிவேலு செல்வரத்தினம்
யா/கோ/3234 திரு. சின்னத்தம்பி சின்னையா
யா/கோ/3235 திரு. தம்பு சிவசுப்பிரமணியம்
யா/கோ/3240 திருமதி. பவளராணி செல்வரத்தினம்
யா/கோ/3246 திரு. நல்லைநாதன் சத்தியமூர்த்தி
யா/கோ/3261 திரு. செல்லையா சண்முகநாதன்
யா/கோ/3266 திரு. மாணிக்கம் சந்திரகிரி
யா/கோ/3275 திரு. கனகசபாபதி திருச்செல்வம்
யா/கோ/3291 திரு. பெரியதம்பி துரைச்சாமி
யா/கோ/3294 திரு. செல்லப்பா திருச்செல்வம்
யா/கோ/3301 திரு. மாரிமுத்து விஜயராசா
யா/கோ/3311 திரு. நாகமுத்து கதிரவேல்
யா/கோ/3319 செல்வி. அருணோதயம் சின்னத்தம்பி
யா/கோ/3320 திரு. செல்லத்துரை பாலசுந்தரம்
யா/கோ/3321 திருமதி. பாலாம்பிகை நடராஜா
யா/கோ/3325 திரு. சின்னையா இந்திரராசா
யா/கோ/3337 திரு. தம்பிராசா கனகநாயகம்
யா/கோ/3353 திரு. வல்லிபுரம் முத்தையா
யா/கோ/3356 திருமதி. மகேஸ்வரி சரவணமுத்து
யா/கோ/3357 திரு. முத்தையா முத்துக்குமாரசுவாமி
யா/கோ/3361 திரு. கணபதிப்பிள்ளை மார்க்கண்டு
யா/கோ/3362 திருமதி. மகேஸ்வரி நடராசா
யா/கோ/3364 திரு. சுப்பையா மாணிக்கவாசகர்
யா/கோ/3368 திரு. கந்தையா நாகேசு
யா/கோ/3373 திருமதி. மலர்மணி நடராசா
யா/கோ/3384 திரு. சிவகுரு பிறைசூடி
யா/கோ/3389 திருமதி. பத்மாவதி அம்பலவாணன்
யா/கோ/3393 திரு. கந்தையா பத்மநாதன்
யா/கோ/3394 திரு. கார்த்திகேசு இராஜரட்ணம்
யா/கோ/3400 திரு. சின்னத்தம்பி இராசதுரை
யா/கோ/3401 திரு. கதிர்காமு இராசசிங்கம்
யா/கோ/3403 திருமதி. றோசம்மா சிவசம்பூ
யா/கோ/3421 திரு. செ.சிவலிங்கம் சிவதாசன்
யா/கோ/3427 திருமதி. சரஸ்வதி கணபதிப்பிள்ளை
யா/கோ/3429 திரு. கனகரத்தினம் சிறீபத்மநாதன்
யா/கோ/3430 திரு. அப்பாக்குட்டி செல்வரத்தினம்
யா/கோ/3431 திரு. நாகர் சோமு
யா/கோ/3433 திரு. பொன்னையா சத்தியவான்
யா/கோ/3440 திரு. சின்னத்தம்பி சின்னத்துரை
யா/கோ/3454 திருமதி. சிவமலர் வேலாயுதபிள்ளை
யா/கோ/3455 திரு. மாணிக்கம் சின்னத்துரை
யா/கோ/3460 திருமதி. தங்கம்மா செல்லையா
யா/கோ/3470 திருமதி. தங்கலட்சுமி நல்லையா
யா/கோ/3471 திரு. செல்லத்துரை தம்பிராசா
யா/கோ/3472 திரு. கந்தையா துரைராசா
யா/கோ/3492 திரு. பொன்னம்பலம் விக்னேஸ்வரன்
யா/கோ/3499 திரு. ஆறுமுகம் வேலுப்பிள்ளை
யா/கோ/3501 திருமதி. அன்னபூபதி கந்தவனநாதன்
யா/கோ/3519 திரு. தாமோதரம்பிள்ளை பாலசுந்தரம்
யா/கோ/3526 திருமதி. யோகநாயகி கதிர்காமதாசன்
யா/கோ/3548 திரு. சபாபதி கதிரவேலு
யா/கோ/3549 திருமதி. கனகபூஷணம் பேரம்பலம்
யா/கோ/3551 திரு. ஆசை குமாரசுவாமி
யா/கோ/3556 திருமதி. கனகேஸ்வரி குலசேகரம்
யா/கோ/3564 திரு. முத்தையகுருக்கள் கிருஷ்ணசாமிக்குருக்கள்
யா/கோ/3567 திரு. கந்தையா கனகசபாபதி
யா/கோ/3587 திரு. முத்தையா நடராஜா
யா/கோ/3590 திருமதி. நீலாவதி யோகரட்ணம்
யா/கோ/3596 திரு. பொன்னுத்துரை நவரத்தினராசா
யா/கோ/3604 திருமதி. பரமேஸ்வரி செல்வராஜா
யா/கோ/3608 திரு. முத்துத்தம்பி பஞ்சலிங்கம்
யா/கோ/3615 திரு. சின்னட்டி பசுபதி
யா/கோ/3616 திருமதி. பரமேஸ்வரி சந்திரம்பிள்ளை
யா/கோ/3636 திரு. இரத்தினசோதி சின்னத்துரை
யா/கோ/3683 திரு. கந்தன் தம்பு
யா/கோ/3703 திரு. நடராசா தெய்வேந்திரன்
யா/கோ/3715 திரு. பாலசுந்தரக்குருக்கள் வைத்தியநாதக்குருக்கள்
யா/கோ/3716 திருமதி. தவமலர் விவேகானந்தராசா
யா/கோ/3718 திரு. சபாபதி வடிவேலு
யா/கோ/3719 திரு. சின்னத்தம்பி சந்திரசேகரம்
யா/கோ/3739 திருமதி. பொன்னம்மா முருகுப்பிள்ளை
யா/கோ/3761 திரு. குட்டித்தம்பி ஆசைப்பிள்ளை
யா/கோ/3764 திரு. சூசை அந்தோனி
யா/கோ/3766 திருமதி. தவமணி இரத்தினசாமி
யா/கோ/3774 திரு. தாமு இளையதம்பி
யா/கோ/3775 திருமதி. மேரிதிரேசா பிறான்சிஸ்
யா/கோ/3780 திரு. சிங்கராசா யோண்ராசா
யா/கோ/3781 திரு. கொன்ஸ்ரன்ரயின் யேசுதாசன்
யா/கோ/3787 திருமதி. பொன்மணி ஜெயராசா
யா/கோ/3793 திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை
யா/கோ/3797 திரு. வேலுப்பிள்ளை காராளசிங்கம்
யா/கோ/3807 திரு. சீனிக்குட்டி கனகசுந்தரம்
யா/கோ/3809 திரு. தம்பு கிருஸ்ணபிள்ளை
யா/கோ/3817 திருமதி. கனகமணி முருகையா
யா/கோ/3821 திரு. வேலுப்பிள்ளை கதிரவேலு
யா/கோ/3831 திரு. மாணிக்கம் மார்க்கண்டு
யா/கோ/3834 திருமதி. மனோன்மணி நடராசா
யா/கோ/3843 திருமதி. நாகபூசணியம்மா மகாலிங்கம்
யா/கோ/3854 திரு. சின்னையா நல்லையா
யா/கோ/3867 திரு. கதிரன் பொன்னம்பலம்
யா/கோ/3875 திருமதி. பரமேஸ்வரி வீரகத்தி
யா/கோ/3889 திருமதி. பூபதியம்மா ஏகாம்பரம்
யா/கோ/3908 திரு. தியாகராசா இரத்தினசபாபதி
யா/கோ/3912 திரு. சின்னத்தங்கம் சிவகுரு
யா/கோ/3915 திரு. வலத்தி செல்லத்துரை
யா/கோ/3922 திரு. கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து
யா/கோ/3932 திரு. சின்னர் செல்லத்துரை
யா/கோ/3933 திருமதி. மேரிநல்லம்மா சிங்கராயர்
யா/கோ/3937 திரு. முத்து ஜெகதீசன்
யா/கோ/3939 திரு. இளையதம்பி சுப்பிரமணியம்
யா/கோ/3941 திருமதி. சிவபாக்கியம் செல்லையா
யா/கோ/3952 திரு. முத்துசாமிகுருக்கள் சிவசுப்பிரமணியசர்மா
யா/கோ/3953 திருமதி. சிசிலியா அருளானந்தம்
யா/கோ/3960 திரு. குழந்தைவேலு செல்வராசா
யா/கோ/3961 திரு. சின்னத்தம்பி செல்லர்
யா/கோ/3965 திரு. தாமோதரம்பிள்ளை செல்வராஜா
யா/கோ/3966 திரு. கந்தையா சண்முகம்
யா/கோ/3972 திரு. வேலுப்பிள்ளை சேனாதிராசா
யா/கோ/3974 திரு. பொன்னம்பலம் தம்பித்துரை
யா/கோ/3983 திருமதி. தெய்வானை தங்கவேலு
யா/கோ/3993 திரு. சரவணமுத்து தம்பிராசா
யா/கோ/3996 திரு. இளையதம்பி தாமு
யா/கோ/3997 திரு. வேலுப்பிள்ளை தங்கராஜா
யா/கோ/3998 திருமதி. தவமணி இரத்தினசாமி
யா/கோ/4000 திரு. கந்தர் வேலுப்பிள்ளை
யா/கோ/4013 திரு. சரவணமுத்து யோகசுந்தரம்
யா/கோ/4019 திரு. செல்லையா அப்புத்துரை
யா/கோ/4020 திரு. ஐயாச்சாமி ஆறுமுகம்
யா/கோ/4027 திரு. இராசா ஏகாம்பரம்
யா/கோ/4032 திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
யா/கோ/4044 திரு. கணபதிப்பிள்ளை கதிர்காமு
யா/கோ/4058 திரு. கந்தையா நடராசா
யா/கோ/4059 திரு. செல்லையா நடராசா
யா/கோ/4072 திருமதி. இரத்தினம்மா நடராசா
யா/கோ/4073 திரு. பொன்னையா இராசதுரை
யா/கோ/4075 திரு. கந்தையா சிற்றம்பலம்
யா/கோ/4079 திரு. பண்டாரம் சின்னையா
யா/கோ/4086 திரு. கந்தையா சிவராசதுரை
யா/கோ/4108 திருமதி. தங்கரத்தினம் நவரத்தினம்
யா/கோ/4110 திரு. சின்னத்தம்பி திருநாவுக்கரசு
யா/கோ/4114 திரு. பண்டாரம் தர்மலிங்கம்
யா/கோ/4118 திரு. கந்தர் வேலுப்பிள்ளை
யா/கோ/4128 திருமதி. நாகம்மா கணபதிப்பிள்ளை
யா/கோ/4133 திரு. கந்தையா ஆறுமுகம்
யா/கோ/4171 திரு. புண்ணியமூர்த்தி கதிரித்தம்பி
யா/கோ/4178 திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி
யா/கோ/4180 திரு. பெரியதம்பி கந்தசாமி
யா/கோ/4222 திருமதி. மங்களேஸ்வரி வேலுப்பிள்ளை
யா/கோ/4228 திரு. கந்தையா நாகலிங்கம்
யா/கோ/4231 திரு. முருகுப்பிள்ளை நடராசா
யா/கோ/4232 திரு. சின்னப்பு நல்லையா
யா/கோ/4238 திருமதி. பொன்னம்மா கந்தசாமி
யா/கோ/4241 திரு. முருகேசு பொன்னுத்துரை
யா/கோ/4246 திரு. செல்லையா பொன்னையா
யா/கோ/4250 திருமதி. புவனேஸ்வரி சாந்தையனார்
யா/கோ/4263 திரு. நாகமுத்து இராசையா
யா/கோ/4273 திரு. வயிரமுத்து சிவகுரு
யா/கோ/4274 திரு. மாணிக்கம் சின்னத்துரை
யா/கோ/4287 திரு. கந்தையா செல்லத்துரை
யா/கோ/4297 திரு. செல்லையா சிவரத்தினம்
யா/கோ/4305 திரு. பொன்னையா செல்லத்துரை
யா/கோ/4306 திரு. கனகரத்தினம் செல்லத்துரை
யா/கோ/4307 திரு. நாகமுத்து சுப்பிரமணியம்
யா/கோ/4309 திரு. வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை
யா/கோ/4331 திரு. வைத்திலிங்கம் தெய்வேந்திரம்
யா/கோ/4345 திரு. சின்னப்பு தம்பிராசா
யா/கோ/4347 திரு. பூதத்தம்பி வேலாயுதர்
யா/கோ/ 4348 திரு. பெரியதம்பி வேலுப்பிள்ளை
யா/கோ/4356 திரு. வல்லிபுரம் வடிவேலு
யா/கோ/4366 திரு. பாலர் அப்புத்துரை
யா/கோ/4376 திரு. கோணர் கணபதிப்பிள்ளை
யா/கோ/4386 திரு. காசியர் சிவசோதி
யா/கோ/4403 திரு. கந்தப்பிள்ளை பொன்னையா
யா/கோ/4406 திருமதி. பொன்னம்மா சபாபதி
யா/கோ/4407 திரு. சீனிவாசகம் பரமேஸ்வரன்
யா/கோ/4415 திரு. வைரமுத்து இரத்தினம்
யா/கோ/4425 திரு. தம்பு செல்லத்துரை
யா/கோ/4438 திரு. இராசலிங்கம் செல்லத்துரை
யா/கோ/4449 திருமதி. சரஸ்வதி துரைசிங்கம்
யா/கோ/4469 திருமதி. தங்கச்சியம்மா விஷயகுமார்
யா/கோ/4473 திரு. மாரிமுத்து வேலுப்பிள்ளை
யா/கோ/4494 திரு. இளையதம்பி நாகராசா
யா/கோ/4495 திரு. கதிரவேலு பேரின்பநாயகம்
யா/கோ/4505 திருமதி. செல்லாச்சிப்பிள்ளை முத்துத்தம்பி
யா/கோ/4509 திரு. பொன்னையா பாலகிருஷ்ணன்
யா/கோ/4511 திருமதி. சிவேஸ்வரி தம்பியையா
யா/கோ/4528 திருமதி. தங்கமுத்து துரையப்பா
யா/கோ/4534 திரு. பச்சமுத்து வெற்றிவேலு
யா/கோ/4544 திரு. ராமன் மார்க்கண்டு
யா/கோ/4547 திரு. நாகன் மாணிக்கம்
யா/கோ/4548 திரு. நாகன் மாணிக்கம்
யா/கோ/4551 திருமதி. பத்மாவதி சிவஞானசுந்தரம்
யா/கோ/4553 திருமதி. பூரணம் கந்தசாமி
யா/கோ/4557 திரு. தம்பு செல்லையா
யா/கோ/4564 திரு. முருகன் தேவராசா
யா/கோ/4568 திருமதி. சிவயோகம் ஏகாம்பரம்
யா/கோ/4574 திரு. சின்னவன் முருகுப்பிள்ளை
யா/கோ/4575 திரு. வல்லி சின்னப்பொடி
யா/கோ/4576 திரு. முருகன் செல்லத்துரை
யா/கோ/4577 திரு. ஆசைப்பிள்ளை நாகமணி
யா/கோ/4593 திரு. கனகசபை நல்லையா
யா/கோ/4595 திருமதி. இராசம்மா பரமு
யா/கோ/4597 திரு. இளையதம்பி இராசரத்தினம்
யா/கோ/4600 திருமதி. சின்னம்மா சின்னத்துரை
யா/கோ/4603 திரு. ராசிங்கர் சுப்பிரமணியம்
யா/கோ/4611 திரு. சுப்பன் ஆழ்வாப்பிள்ளை
யா/கோ/4623 திரு. ஆறுமுகம் அருணாசலம்
யா/கோ/4624 செல்வி. நளாயினி இளையதம்பி
யா/கோ/4625 திருமதி. ஆச்சிமுத்து செல்லையா
யா/கோ/4634 திரு. கதிரன் காத்தி
யா/கோ/4645 திருமதி. அன்னப்பிள்ளை ஆசைப்பிள்ளை
யா/கோ/4657 திரு. இளையதம்பி கனகரத்தினம் இராசதுரை
யா/கோ/4658 திரு. வேலன் கந்தன்
யா/கோ/4664 திரு. சரவணமுத்து காசிப்பிள்ளை
யா/கோ/4681 திரு. சரவணமுத்து மூத்ததம்பி
யா/கோ/4685 திரு. இளையப்பு முத்துவேலு
யா/கோ/4687 திருமதி. மனோன்மணி சிவசுப்பிரமணியம்
யா/கோ/4696 திரு. அருணாசலம் வைத்திலிங்கம் முத்துச்சாமி
யா/கோ/4710 திரு. பூதத்தம்பி நித்தியானந்தம்
யா/கோ/4726 திருமதி. பிரகசுந்தரகுசாம்பாள் (சுந்தரி) கந்தையா
யா/கோ/4728 திரு. சின்னையா பொன்னம்பலம்
யா/கோ/4742 திரு. வைத்திலிங்கம் பொன்னம்பலம்
யா/கோ/4752 திரு. சுந்தரஐயர் இராமச்சந்திரசர்மா
யா/கோ/4777 திரு. சின்னத்துரை சண்முகவடிவேல்
யா/கோ/4783 திரு. தம்பிராசா சுப்பிரமணியம்
யா/கோ/4789 திரு. முத்தர் சின்னத்தம்பி
யா/கோ/4798 திருமதி. சின்னம்மா நடேசன்
யா/கோ/4805 திருமதி. வள்ளியம்மை சின்னையா
யா/கோ/4811 திருமதி. இராசமணி சிவஞானம்
யா/கோ/4816 திரு. அம்பலவாணர் சிறீரங்கநாதன்
யா/கோ/4818 திரு. சுப்பர் சின்னத்தம்பி
யா/கோ/4822 திரு. கதிரன் சின்னவன்
யா/கோ/4827 திரு. சின்னையா சிவசம்பு
யா/கோ/4834 திரு. சின்னத்தம்பி சிங்கரத்தினம்
யா/கோ/4835 திரு. இளையதம்பி சின்னத்தம்பி
யா/கோ/4838 திரு. சின்னத்தம்பி செல்வரத்தினம்
யா/கோ/4857 திரு. அருணாசலம் தர்மலிங்கம்
யா/கோ/4858 திருமதி. தவரத்தினம் குமாரசாமி
யா/கோ/4860 திருமதி. இராசேஸ்வரி தர்மராசா
யா/கோ/4861 திரு. நன்னித்தம்பி தம்பு
யா/கோ/4862 திரு. சபாபதி தங்கராசா
யா/கோ/4865 திரு. சின்னையா வைத்திலிங்கம்
யா/கோ/4871 திரு. கார்த்திகேசு . வேலுப்பிள்ளை
யா/கோ/4890 திருமதி. அழகம்மா செல்லத்துரை
யா/கோ/4896 திரு. கதிர்காமு சின்னத்தம்பி
யா/கோ/4901 திருமதி. கனகம்மா செல்லையா
யா/கோ/4902 திருமதி. பசுபதி மாணிக்கம்
யா/கோ/4904 திரு. மடுத்தீன் சிறில்
யா/கோ/4912 திரு. முத்தையா கார்த்திகேசன்
யா/கோ/4920 திருமதி. தங்கம்மா சின்னத்துரை
யா/கோ/4922 திருமதி. நல்லம்மா வீரகத்திப்பிள்ளை
யா/கோ/4925 திருமதி. செல்வராசு செல்லப்பா
யா/கோ/4928 திரு. சுப்பர் கதிரவேலு
யா/கோ/4930 திரு. சுந்தரம் பாலச்சந்திரன்
யா/கோ/4931 திரு. வைரவன் சின்னத்துரை
யா/கோ/4933 திரு. கந்தன் கிருஸ்ணன்
யா/கோ/4940 திரு. நாகலிங்கம் கந்தையா
யா/கோ/ 4953 திரு. கார்த்திகேசஐயர் சாம்பசதாசிவக்குருக்கள்
யா/கோ/4969 திருமதி. மகேஸ்வரி நடராசா
யா/கோ/4972 திரு. தம்பிப்பிள்ளை பேரின்பநாயகம்
யா/கோ/4978 திரு. கதிரவேலு இராசரத்தினம்
யா/கோ/4988 திருமதி. அன்னபூரணம் தம்பிப்பிள்ளை
யா/கோ/4989 திரு. சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி
யா/கோ/5009 திரு. பொன்னையா சுந்தரலிங்கம்
யா/கோ/5019 திரு. சிவக்கொழுந்து தருமலிங்கம்
யா/கோ/5032 திரு. சங்கரபிள்ளை முருகேசு
யா/கோ/5034 திரு. கந்தையா நடராசா
யா/கோ/5048 திருமதி. தர்மசீலி பொன்னையா
யா/கோ/5050 திருமதி. அன்னமலர் அருளம்பலம்
யா/கோ/5051 திரு. விசுவலிங்கம் அரியரத்தினம்
யா/கோ/5052 திரு. சுப்பிரமணியம் ஆறுமுகசாமி
யா/கோ/5055 திரு. நாகலிங்கம் சீவரத்தினம்
யா/கோ/5066 திரு. தாமோதரம்பிள்ளை பாலசுந்தரம்
யா/கோ/5091 திரு. சின்னத்தம்பி கந்தையா
யா/கோ/5099 திருமதி. கலாநிதி ரவீந்திரராஜா
யா/கோ/5101 திரு. கணபதி கந்தையா
யா/கோ/5138 திருமதி. நல்லம்மா கணபதிப்பிள்ளை
யா/கோ/5166 திரு. சுப்பிரமணியம் இராசரட்ணம்
யா/கோ/5170 திருமதி. இராஜேஸ்வரி சுவாமிநாதன்
யா/கோ/5180 திரு. கந்தையா இரத்தினசிங்கம்
யா/கோ/5188 திரு. சின்னப்பு இராசா
யா/கோ/5194 திருமதி. செல்லம்மா தம்பையா
யா/கோ/5196 திருமதி. சிவபாக்கியம் ஐயாத்துரை
யா/கோ/5199 திரு. வேலன் சின்னத்துரை
யா/கோ/5201 திரு. செல்லத்துரை சத்தியசீலன்

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

## மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/கோ/5211 திரு. வைரமுத்து சண்முகநாதன்
யா/கோ/5212 திரு. ஆறுமுகம் செல்வரத்தினம்
யா/கோ/5213 திரு. ஆறுமுகம் செல்லையா
யா/கோ/5219 திருமதி. சுந்தரபாஸ்கரி செல்லத்துரை
யா/கோ/5221 திரு. ஆறுமுகம் அமிர்தலிங்கம்
யா/கோ/5234 திரு. பரமலிங்கம் சண்முகராசா
யா/கோ/5251 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
யா/கோ/5252 திரு. வைத்தியநாதர் சுப்பிரமணிய தேசிகர் சிவசுப்பிரமணியம்
யா/கோ/5262 திரு. தம்பையா துரைசிங்கம்
யா/கோ/5267 திரு. கனகசபை தியாகராசா
யா/கோ/5276 திரு. செல்லத்துரை தேவராசா
யா/கோ/5278 திரு. சீனிவாசகம் துரை
யா/கோ/5284 திரு. தம்பு வைத்திலிங்கம்
யா/கோ/5320 திருமதி. கனகேஸ்வரி தருமரட்ணம்
யா/கோ/5328 திருமதி. ஞானமணி கந்தையா
யா/கோ/5333 திரு. கந்தசாமி கைலாசபிள்ளை
யா/கோ/5334 திரு. மாணிக்கம் குமாரசாமி
யா/கோ/5347 திருமதி. மகேஸ்வரி கந்தையா
யா/கோ/5357 திருமதி. நாகேஸ்வரி சுப்பிரமணியம்
யா/கோ/5359 திரு. கந்தையா நடராசா
யா/கோ/5363 திரு. மருதர் நாகலிங்கம்
யா/கோ/5364 திருமதி. நாகரத்தினம் நடராசா
யா/கோ/5373 திரு. கனகசபை நடராஜா
யா/கோ/5399 திரு. ஜேம்ஸ்பற்றி தேவபாலா இராசா
யா/கோ/5400 திரு. நாகலிங்கம் இராசரத்தினம்
யா/கோ/5423 திரு. இராசதுரை சின்னத்துரை
யா/கோ/5428 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
யா/கோ/5436 திரு. இராமலிங்கம் சரவணமுத்து
யா/கோ/5452 திரு. கந்தசாமி செட்டி சொக்கலிங்கம்
யா/கோ/5457 செல்வி. தையல்நாயகியம்மா சுப்பிரமணியம்
யா/கோ/5467 திரு. ஆறுமுகம் வயிரமுத்து
யா/கோ/5475 திரு. கணபதிப்பிள்ளை அப்புத்துரை
யா/கோ/5476 திருமதி. அன்னம்மா சம்மிக்கேல்
யா/கோ/5481 திரு. நல்லையா அரியரட்ணம் ஜே.பி
யா/கோ/5482 திரு. வீரவாகு ஆறுமுகம்
யா/கோ/5484 திரு. சுப்பையா ஆறுமுகம்
யா/கோ/5494 திரு. செல்லத்துரை இந்திராசா
யா/கோ/5498 திரு. முத்துக்குமாரு ஜெயரத்தினம்
யா/கோ/5506 திரு. வேலுப்பிள்ளை கனகராசா
யா/கோ/5523 திருமதி. மகேஸ்வரி சொக்கலிங்கம்
யா/கோ/5525 திருமதி. மனோன்மணிஅம்பாள் நாகேந்திரக்குருக்கள்
யா/கோ/5530 திரு. நமசிவாயம் நல்லைநாதன்
யா/கோ/5540 திருமதி. பூமணி துரையப்பா
யா/கோ/5542 திருமதி. பரமேஸ்வரி கதிரேசபிள்ளை
யா/கோ/5545 திரு. சுவாமிநாதர் பொன்னுத்துரை
யா/கோ/5553 திருமதி. பொன்னம்மா இரத்தினராசா
யா/கோ/5556 திரு. வேலாயுதம் பத்மநாதன்
யா/கோ/5565 திருமதி. இராசம்மா இராசமுத்தையா
யா/கோ/5568 திரு. கனகரட்ணம் லோகானந்தம்
யா/கோ/5572 திரு. இராசரத்தினம் இரத்தினவேலு
யா/கோ/5575 திரு. சின்னத்தம்பி சின்னத்துரை
யா/கோ/5577 திரு. முருகேசு சிவசுப்பிரமணியம்
யா/கோ/5582 திரு. தம்பு சின்னத்துரை
யா/கோ/5597 திரு. தம்பையா சிவபாதம்
யா/கோ/5601 திரு. சபாபதி தயாபரன்
யா/கோ/5610 திரு. வீரசிங்கம் சிவானந்தம்
யா/கோ/5625 திருமதி. திருஞானபாக்கியம் கணபதிப்பிள்ளை
யா/கோ/5628 திரு. வேலுப்பிள்ளை தருமலிங்கம்
யா/கோ/5631 திரு. தம்பையா தியாகராசா
யா/கோ/5650 திருமதி. யோகேஸ்வரி நவரட்ணம்
யா/கோ/5653 திரு. கபிரியேல் அருளப்பு
யா/கோ/5655 திரு. தமியாம்பிள்ளை அருள்பிரகாசம்
யா/கோ/5666 திரு. வைரவப்பிள்ளை கதிரவேலு
யா/கோ/5671 திருமதி. கனகம்மா செல்லர்
யா/கோ/5682 திரு. தமியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை
யா/கோ/5688 திரு. சீமாம்பிள்ளை பாவிலுப்பிள்ளை
யா/கோ/5689 திரு. சின்னார் பொன்னுத்துரை
யா/கோ/5692 திரு. வரப்பிரகாசம் பேதுருப்பிள்ளை
யா/கோ/5700 திரு. வரப்பிரகாசம் சுவாம்பிள்ளை
யா/கோ/5721 திரு. சுப்பிரமணியம் அழகரத்தினம்
யா/கோ/5722 திருமதி. அன்னம்மா திருநாவுக்கரசு
யா/கோ/5727 திரு. சங்கரப்பிள்ளை பாலகிருட்டினன்
யா/கோ/5734 திருமதி. ஞானாம்பிகை கனகசபை
யா/கோ/5738 திரு. பொன்னையா அல்பேட்ஜெயம்
யா/கோ/5750 திரு. சிலுவை கதிரவேலு
யா/கோ/5753 திரு. தம்பிப்பிள்ளை காங்கேசு
யா/கோ/5770 திருமதி. மகேஸ்வரி செல்வநாயகம்
யா/கோ/5771 திருமதி. முத்தம்மா செல்லத்துரை
யா/கோ/5777 திருமதி. முத்தாச்சி தர்மராஜா
யா/கோ/5778 திரு. தம்பிப்பிள்ளை மகேசன்
யா/கோ/5780 திருமதி. மகாலட்சுமி இராமநாதன்
யா/கோ/5791 திரு. கனகசபை நமசிவாயம்
யா/கோ/5793 திருமதி. நேசமலர் சின்னத்துரை
யா/கோ/5796 திரு. கனகசபை நாகராசா
யா/கோ/5802 திரு. இளையதம்பி வேலாயுதம்
யா/கோ/5803 திரு. தியாகராசா பூபாலசிங்கம்
யா/கோ/5806 திருமதி. புவனேஸ்வரி சுப்பிரமணியம்
யா/கோ/5815 திருமதி. பஞ்சரத்னம் சிவராஜா
யா/கோ/5816 திரு. சின்னத்தம்பி பஞ்சலிங்கம்
யா/கோ/5836 திருமதி. செல்லம்மா செல்லத்துரை
யா/கோ/5840 திரு. செல்லையா செல்வரத்தினம்
யா/கோ/5857 திரு. செல்லையா சுந்தரலிங்கம்
யா/கோ/5867 திரு. செல்வரத்தினம் சிவபாலன்
யா/கோ/5889 திரு. பொன்னையா வடிவேல்
யா/கோ/5896 திருமதி. அரியம்மா தம்பிராசா
யா/கோ/5912 திரு. பொன்னுத்துரை மகாலிங்கம்
யா/கோ/5916 திரு. கறுவல் பொன்னுத்துரை
யா/கோ/5927 திரு. இரத்தின் இராஜநாயகம்
யா/கோ/5934 திரு. சீனியன் இராசையா
யா/கோ/5957 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
யா/கோ/5982 திரு. சின்னத்தம்பி ஜீவரத்தினம்
யா/கோ/5990 திரு. நாகலிங்கம் கந்தையா
யா/கோ/5998 திரு. நாகமுத்து கனகசபை
யா/கோ/6001 திரு. நடராசா குமரேசபசுபதி
யா/கோ/6006 திருமதி. குணரட்ணம் மகாதேவன்
யா/கோ/6011 திருமதி. மாதங்கரசி காசிநாதன்
யா/கோ/6013 திரு. சின்னத்தம்பி முத்துத்தம்பி
யா/கோ/6017 திரு. வைத்திலிங்கம் நாகேசு
யா/கோ/6022 திரு. பொன்னுத்துரை நடராசா
யா/கோ/6026 திருமதி. நாகரத்தினம் சிவராசா
யா/கோ/6038 திருமதி. பராசக்தி குலசேகரம்
யா/கோ/6039 திரு. தம்பிப்பிள்ளை இராசகோபால்
யா/கோ/6049 திருமதி. இராசம்மா பொன்னுத்துரை
யா/கோ/6051 திரு. பொன்னையா இராசதுரை
யா/கோ/6061 திரு. தம்பிப்பிள்ளை சிவலிங்கம்
யா/கோ/6070 திரு. ஆறுமுகம் சிவபாதசுந்தரம்
யா/கோ/6089 திரு. நாகமுத்து செல்வரத்தினம்
யா/கோ/6099 திருமதி. இராசலட்சுமி இரத்தினம்
யா/கோ/6117 திருமதி. தங்கம்மா தருமலிங்கம்
யா/கோ/6124 திரு. கந்தையா விஸ்வலிங்கம்
யா/கோ/6126 திரு. பரராஜசிங்கம் வீரகுலசிங்கம்
யா/கோ/6136 திரு. கந்தையா கனகராசா
யா/கோ/6145 திரு. நாகலிங்கம் நடேசன்
யா/கோ/6149 திரு. கந்தையா சின்னத்துரை
யா/கோ/6151 திரு. மாணிக்கம் கந்தகுமார்
யா/கோ/6154 திருமதி. தங்கம் தம்பன்
யா/கோ/6156 திருமதி. கமலாதேவி தனபாலசிங்கம்
யா/கோ/6162 திருமதி. பூமணி துரைசிங்கம்
யா/கோ/6170 திரு. சுப்பிரமணியம் மழவராயர்
யா/கோ/6178 திரு. கணபதிப்பிள்ளை அருணாசலம்
யா/கோ/6188 திரு. கணபதிப்பிள்ளை முருகமூர்த்தி
யா/கோ/6213 திருமதி. நாகரத்தினம் கந்தசாமி
யா/கோ/6220 திரு. சிவசம்பு தம்பித்துரை
யா/கோ/6238 திருமதி. செங்கமலம் கனகசபை
யா/கோ/6244 திருமதி. பராசக்தி சின்னத்துரை
யா/கோ/6264 திருமதி. திருப்பதி பூபாலசிங்கம்
யா/கோ/6268 திரு. தம்பிஜயா அமிர்தலிங்கம்
யா/கோ/6280 திரு. வேலாயுதம் மகேந்திரன்
யா/கோ/6299 திருமதி. அகில் துரைசாமி
யா/கோ/6302 திருமதி. புஸ்பரத்தினம் அருளானந்தம்
யா/கோ/6328 திரு. இராமலிங்கம் சோமசுந்தரம்
யா/கோ/6332 திருமதி. அற்புதம் மார்க்கண்டு
யா/கோ/6333 செல்வி. சிவபாக்கியம் சின்னத்தம்பி
யா/கோ/6335 திரு. வைரமுத்து வயித்திலிங்கம்
யா/கோ/6345 செல்வி. ஜெயசி மரியாம்பிள்ளை
யா/கோ/6354 திரு. கதிரிப்பிள்ளை நன்னித்தம்பி
யா/கோ/6365 திரு. ஞானப்பிரகாசம் அல்பேட்
யா/கோ/6371 திரு. தர்மரட்ணம் எட்வின் அருந்தவ அமிர்தராஜா
யா/கோ/6381 திருமதி. பாக்கியம் தம்பிராசா
யா/கோ/6383 திரு. தம்பையா சிவசுப்பிரமணியம்
யா/கோ/6390 திருமதி. சொர்ணம்மா மார்க்கண்டு
யா/கோ/6395 திருமதி. மனோன்மணி செல்வநாயகிப்பிள்ளை
யா/கோ/6407 திரு. அப்பாப்பிள்ளை கதிர்காமர்
யா/கோ/6410 திரு. ஐயாத்துரை சண்முகநாதன்
யா/கோ/6415 திரு. யோசெப்பு சுவாம்பிள்ளை
யா/கோ/6418 திருமதி. பேபிஸ்நாயகி மயில்வாகனம்
யா/கோ/6436 திரு. முருகன் சுப்பன்
யா/கோ/6450 திருமதி. நாகம்மா முத்துச்சாமி
யா/கோ/6454 திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை
யா/கோ/6464 திரு. சிதம்பரப்பிள்ளை நடராஜா
யா/கோ/6469 திரு. செல்லையா சதானந்தம்
யா/கோ/6482 திரு. பொன்னுத்துரை சோதிசந்திரம்
யா/கோ/6493 திருமதி. இரத்தினம்மா சபாரட்ணம்
யா/கோ/6494 திரு. சுப்பிரமணியம் சோதிலிங்கம்
யா/கோ/6495 திரு. கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல்
யா/கோ/6497 திரு. விசுவனாதர் கனகசபை
யா/கோ/6498 திரு. வீரசிங்கம் சோமசுந்தரம்
யா/கோ/6501 திரு. வேலுப்பிள்ளை சின்னத்துரை
யா/கோ/6503 திருமதி. மனோன்மணி நாகலிங்கம்
யா/கோ/6531 திருமதி. சிவகாமிப்பிள்ளை தெய்வேந்திரகுமாரசாமி
யா/கோ/6536 திரு. சண்முகம் கதிர்காமநாதன்
யா/கோ/6541 திருமதி. சின்னப்பிள்ளை இராசையா
யா/கோ/6543 திருமதி. சரஸ்வதி சபாரட்ணம்
யா/கோ/6545 திருமதி. இராசபூரணம் குணரத்தினம்
யா/கோ/6570 திரு. மாதர் செல்லத்துரை
யா/கோ/6571 திருமதி. விஸிபிரேட் கந்தையா
யா/கோ/6579 திரு. தம்பு இராமலிங்கம்
யா/கோ/6582 திரு. திருச்செல்வம் மேரியோசேப்
யா/கோ/6592 திரு. ஆறுமுகம் செல்லத்துரை
யா/கோ/6596 திரு. வின்சென்ற்வேதானந்தன் செல்லத்தம்பு
யா/கோ/6601 திருமதி. செல்வம் யோசப்
யா/கோ/6609 திரு. சின்னத்துரை யேசுதாசன்
யா/கோ/6610 திரு. வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளை
யா/கோ/6611 திருமதி. கமலாம்பதி சுப்பிரமணியம்
யா/கோ/6625 திருமதி. சின்னத்தங்கம் சின்னத்துரை
யா/கோ/6629 திரு. வயிரமுத்து சொக்கநாதன்
யா/கோ/6633 திருமதி. கதிரசி தம்பிப்பிள்ளை
யா/கோ/6636 திரு. தம்பு காசிப்பிள்ளை
யா/கோ/6638 திருமதி. மேரிதிரேசா இராசரத்தினம்
யா/கோ/6642 திரு. நாகலிங்கம் கந்தசாமி
யா/கோ/6645 திரு. நாகலிங்கம் இராசசிங்கம்
யா/கோ/6658 திரு. சித்திவிநாயகமூர்த்தி கனேசமூர்த்தி
யா/கோ/6669 திருமதி. இரத்தினம் இராசரத்தினம்
யா/கோ/6671 திரு. மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்
யா/கோ/6685 திரு. நாகமுத்து முத்தையா
யா/கோ/6694 திரு. நாகேசு பார்க்கண்டு
யா/கோ/6700 திருமதி. சொர்ணரத்தினம் வேலாயுதபிள்ளை
யா/கோ/6704 செல்வி. கமலாவதி தம்பையா
யா/கோ/6708 செல்வன். சின்னத்தம்பி டிகுமார்
யா/கோ/6711 திருமதி. பூரணம் பஞ்சலிங்கம்
யா/கோ/6712 திருமதி. கனகமணி கிருஷ்ணபிள்ளை
யா/கோ/6722 திருமதி. மனோன்மணி கந்தையா
யா/கோ/6723 திரு. சுபாரத்தினம் சாந்திகரன்
யா/கோ/6724 திரு. சித்தகந்தையா நல்லதம்பி
யா/கோ/6725 திரு. செல்லத்துரை சிசில்ஜோன் ஜெயராசா
யா/கோ/6744 திருமதி. லட்சுமிப்பிள்ளை பூதத்தம்பி
யா/கோ/6745 திரு. சின்னையா சற்குணநாதன்
யா/கோ/6760 திரு. இராமர் நாகராசா
யா/கோ/6776 திருமதி. திரேசா யோசவ்
யா/கோ/6783 திரு. ஆறுமுகம் லோகேஸ்வரன்
யா/கோ/6792 திருமதி. தங்கம்மா முத்துக்குமாரு
யா/கோ/6795 திருமதி. இரத்தினேஸ்வரி தர்மலிங்கம்
யா/கோ/6796 திரு. கிருஷ்ணபிள்ளை கந்தசாமி
யா/கோ/6802 திருமதி. கனகாம்பிகை செல்லத்துரை
யா/கோ/6808 திரு. தம்பு நமசிவாயம் பஞ்சாட்சரம்
யா/கோ/6828 திரு. தில்லையம்பலம் சுப்பிரமணியம்
யா/கோ/6832 திரு. மாணிக்கம் கிருஷ்ணபிள்ளை
யா/கோ/6838 திரு. கணபதிப்பிள்ளை செல்லத்துரை
யா/கோ/6846 திரு. கணபதிப்பிள்ளை அருணாசலம்
யா/கோ/6849 திரு. பொன்னர் ஐயம்பிள்ளை
யா/கோ/6850 திரு. சரவணமுத்து தம்பிஜயா
யா/கோ/6862 திரு. அருணாசலம் தர்மலிங்கம்
யா/கோ/6865 திருமதி. இராசமணி இராசதுரை
யா/கோ/6870 திருமதி. இரத்தினம் ஆறுமுகம்
யா/கோ/6871 திரு. நன்னியன் முத்தன்
யா/கோ/6886 திரு. கிருஸ்ணா பொன்னுத்துரை
யா/கோ/6887 திருமதி. சிவக்கொழுந்து கந்தராமுத்தம்பி
யா/கோ/6890 திரு. இளையதம்பி சரவணமுத்து
யா/கோ/6891 திருமதி. பரணி சின்னையா
யா/கோ/6892 திருமதி. சசிகலா இராசநாயகம்
யா/கோ/6903 திருமதி. லட்சுமி மாணிக்கம்
யா/கோ/6915 திருமதி. லெற்றிசியா அருளானந்தம்
யா/கோ/6921 திரு. கதிரித்தம்பி ஆறுமுகம்
யா/கோ/6922 திரு. கதிரித்தம்பி ஆறுமுகம்
யா/கோ/6946 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
யா/கோ/6969 திரு. கதிரித்தம்பி கணபதிப்பிள்ளை
யா/கோ/6970 திருமதி. நாகம்மா பரராசசிங்கம்
யா/கோ/6981 திரு. சபாபதி வடிவேலு
யா/கோ/6991 திருமதி. அக்னேஸ் அந்தோனிப்பிள்ளை
யா/கோ/6992 திரு. பொன்னையா நவரத்தினசிங்கம்
யா/கோ/6993 திரு. தில்லையா தம்பிப்பிள்ளை
யா/கோ/6995 திருமதி. மகேஸ்வரி நாகநாதி
யா/கோ/7010 திரு. தம்பிமுத்து மயில்வாகனம்
யா/கோ/7013 திருமதி. மனோன்மணி தம்பிராசா
யா/கோ/7014 திரு. கந்தையா சண்முகநாதன்
யா/கோ/7015 திரு. செல்லப்பா செல்லத்துரை
யா/கோ/7022 திருமதி. லட்சுமிப்பிள்ளை வைத்திலிங்கம்
யா/கோ/7057 திரு. தம்பிராசா காசிலிங்கம்
யா/கோ/7084 திரு. செல்லத்துரை சரவணமுத்து
யா/கோ/7087 திரு. சின்னத்தம்பி இராசையா
யா/கோ/7088 திரு. குஞ்சான் கனகன்
யா/கோ/7121 திரு. கதிரன் கணபதி
யா/கோ/7130 திரு. அம்பலம் இராசு
யா/கோ/7131 திருமதி. ரோசலின் கிறிசோஸ்ரொம்
யா/கோ/7146 திரு. கதிரன் பொன்னையா
யா/கோ/7151 திரு. முருகேசு சிவபாதம்
யா/கோ/7173 திருமதி. சின்னமணி செல்லையா
யா/கோ/7183 திரு. நாகமுத்து நாகலிங்கம்
யா/கோ/7185 திரு. சீமாம்பிள்ளை பாவிலுப்பிள்ளை
யா/கோ/7188 திருமதி. பரிமளம் தேவசகாயம்
யா/கோ/7193 திரு. சின்னப்பு யோசேப்
யா/கோ/7216 திருமதி. பரிமளம் விசுவாசம்
யா/கோ/7218 திரு. சின்னட்டி சீனியர்
யா/கோ/7241 திரு. வைரமுத்து நடராஜா
யா/கோ/7247 திரு. பொன்னர் துரைராசா
யா/கோ/7250 திருமதி. பொன்னம்மா சின்னப்பு
யா/கோ/7265 திரு. பூதன் கனகசிங்கம்
யா/கோ/7267 திருமதி. தங்கராசம் கபிரியேற்பிள்ளை
யா/கோ/7269 திருமதி. லில்லிபுஸ்பமலர் றைற்
யா/கோ/7276 திரு. கைலாயர் கிருஸ்ணபிள்ளை
யா/கோ/7283 திரு. செல்லையா சண்முகலிங்கம்
யா/கோ/7299 திரு. கந்தையா கார்த்திகேசு
யா/கோ/7313 திரு. முத்ததம்பி சண்முகலிங்கம்
யா/கோ/7318 திரு. மாணிக்கம் தம்பிராசா
யா/கோ/7320 திருமதி. காந்தம்மா கதிரவேலு
யா/கோ/7351 திருமதி. கனகம்மா ஆறுமுகம்
யா/கோ/7372 திரு. மாதன் கந்தையா
யா/கோ/7375 திருமதி. சின்னம்மா முத்தன்
யா/கோ/7378 திரு. சின்னையா சின்னத்தம்பி
யா/கோ/7391 திருமதி. அழகம்மா செல்லப்பா
யா/கோ/7392 திரு. ஞானப்பிரகாசம் இம்மானுவேல்
யா/கோ/7403 திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம்
யா/கோ/7416 திரு. செல்லத்துரை கதிர்காமசுந்தரலிங்கம்
யா/கோ/7421 திருமதி. கமலாம்பிகை குமாரசாமி
யா/கோ/7429 திருமதி. கமலாதேவி தம்பையா
யா/கோ/7437 திரு. டேவிட் ஆறுமுகம் நைல்ஸ்
யா/கோ/7440 திருமதி. சத்தியவதி நல்லையா
யா/கோ/7446 திருமதி. தங்கம்மா கதிரவேலு
யா/கோ/7461 திருமதி. சந்திராதேவி சுப்பிரமணியம்
யா/கோ/7467 திரு. மார்க்கண்டு நவரத்தினம்
யா/கோ/7472 திருமதி. சோமசுந்தரம் இரத்தினசபாபதி
யா/கோ/7477 திருமதி. ஜெகசோதி முத்தையா
யா/கோ/7505 திருமதி. வரதலக்குமி மயில்வாகனம்
யா/கோ/7511 திரு. சுப்பர் பாலசிங்கம்
யா/கோ/7515 திரு. வேலுப்பிள்ளை கனகரத்தினம்
யா/கோ/7517 திரு. கார்த்தி செல்லத்துரை
யா/கோ/7518 திருமதி. செல்லம்மா சிதம்பரப்பிள்ளை
யா/கோ/7520 திருமதி. பவளம் வேலாயுதம்
யா/கோ/7527 திரு. சபாபதி நல்லைநாதன்
யா/கோ/7528 திரு. பிச்சைமுத்து சுபாரத்தினம்
யா/கோ/7532 திரு. சின்னப்பா விஸ்வநாதர்
யா/கோ/7533 திரு. முருகன் கதிரன்
யா/கோ/7535 திரு. அருணாசலம் சிவசுப்பிரமணியம்
யா/கோ/7540 திரு. வேலன் நாகன்
யா/கோ/7544 திருமதி. செல்வநாகம் தம்பிராசா
யா/கோ/7545 திரு. அம்பலவாணர் நடராசா
யா/கோ/7546 திரு. இளையவன் மாணிக்கன்
யா/கோ/7558 திரு. கணபதிப்பிள்ளை கிட்டிணர்
யா/கோ/7568 திரு. சபாபதி இரத்தினம்

தொடரும்...

# சொத்துக் குவிப்பு வழக்கு ஒக். 10 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



(சென்னை)

பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் தமிழக முதலமைச்சர்மீதான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சொத்துக்குவிப்பு வழக்கையும் லண்டனில் உல்லாசவிடுதி வாங்கியதாக தொடரப்பட்ட வழக்கையும் ஒன்றாக விசாரிக்க உச்சநீதிமன்றம் தடை விதித்திருந்ததால் பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் இந்த வழக்கு விசாரணையை பிற்போட்டிருந்தது.

அதேவேளை நேற்று பெங்களூர் நீதிமன்றத்தில் இடம் பெற்ற சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணையின் போது நேரடியாக தாம் ஆஜராவதிலிருந்து விலக்களிக்க வேண்டும் என ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட ஐவர் சமர்ப்பித்த மனுவை ஏற்றுக் கொண்டே இவ்வழக்கை ஒக்ரோபர் பத்தாம் திகதிக்கு ஒத்திவைத்ததாக நீதிபதி தெரிவித்தார்.

# இரசாயன புகை பரவியதால் ஈரோடு பகுதியில் பரபரப்பு

நேற்று முன்தினம் நள்ளிரவு தமிழகம் ஈரோடு அருகே கருங்கல் பாளையத்தில் கிடங்கு ஒன்றில் வைக்கப்பட்டிருந்த இராசாயனப் பொருட்களிலிருந்து பெருமளவு புகை வெளியேறியதால் அப்பகுதி கிராம வாசிகளுக்கு மூச்சடைப்பு ஏற்பட்டது.

இதனால் பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். சுமார் மூன்று கிலோமீற்றர் உயரத்திற்கு இந்தப் புகை கிளம்பியதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நிலைமையை அறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு சென்று மேற்கொண்ட நடவடிக்கையினால் மிகப்பெரும் விபத்து தடுக்கப் பட்டதாக தமிழக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# போலி வாக்காளர் பட்டியல் தொடர்பில் சட்டநடவடிக்கை

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் போலி வாக்காளர்களைச் சேர்க்க முயற்சித்தவர்கள் மீது சட்டவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் எம்.கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசியஅவர் போலிவிண்ணப்பங்கள் குறித்து தேர்தல் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஆய்வுசெய்த பின்னர் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் 'எனத் தெரிவித்தார்.

போலி வாக்காளர்கள் சேர்க்கை முறைப்பாடு குறித்து தமிழகத்தில் தேர்தல் ஆணையக அதிகாரிகள் குழு விரிவாக ஆய்வுசெய்து அதன் அறிக்கையைத் தமக்கு சமர்ப்பித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# திருமணங்களை கட்டாயம் பதிவு செய்ய இந்தியப் பாராளுமன்றில் சட்டம் தாக்கல்

திருமணங்களைக் கட்டாயம் பதிவு செய்யவும், பெண்களுக்கு 18 வயதுக்கு முன் திருமணம் செய்வதைத் தடுக்கவும் என புதிய சட்டம் இந்தியப்பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாநிலங்களவையில் பெண் உறுப்பினர் பிரேமா கரியப்பா நேற்று முன்தினம் மூன்று புதிய தனிநபர் மசோதாக்களை தாக்கல் செய்தார்.

அதில் ஒன்று "கட்டாய திருமணப் பதிவு மசோதா-2005'' என்பது ஆகும். இந்த மசோதாவின் படி அனைத்து திருமணங்களும் கட்டாயமாக பதிவுசெய்யப்படவேண்டும். இந்த மசோதா திருமணங்களில் நடக்கும் மோசடி மற்றும் குழந்தைகள் (18 வயதுக்கு குறைவான பெண்கள்) திருமணத்தைத்தடுக்கவும் வழி செய்கிறது.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் இந்திய பெண்ணை மணமுடிப்பதாக இருந்தால் இந்த மசோதாவின்படி தான் ஏற்கனவே திருமணமானவர் இல்லை என்பதற்கான பிரமாண உறுதிமொழிப்பத்திரத்தைத் தாக்கல்செய்யவேண்டும். திருமணம் தொடர்பான மற்ற பிரச்சினை களுக்குத் தீர்வுகாண இந்த மசோதா வழி செய்கிறது.

பிரேமா கரியப்பா தாக்கல் செய்த மற்றொரு மசோதா பிச்சை எடுப்பதைத் தடுத்தல் மற்றும் பிச்சைகாரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது பற்றியதாகும். இன்னொரு மசோதா திருமணம் என்ற பெயரில் பணத்தை விரயம் செய்வதைத் தடுப்பதற்கானதாகும்


## பணிநிலைக்கான வேண்டுகை

*கிளிநொச்சியில் இயங்கும் தமிழர்புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்திற்கு திட்டஅலுவலர் பணிநிலைக்கு புதிதாக ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.*

*தகைமையுடையவர்கள் தங்கள் தனிவரலாறு அடங்கிய (சுயவிரம்) வேண்டுகையுடனும், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ்கள்,ஏனைய சான்றிதழ்களுடனும் 02.09.2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அருகாமையிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ள நேர்முகத்தேர்விற்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

**தகைமைகள்:-**

- க.பொ.த.(உ/த) தேர்ச்சி அடைந்திருப்பதுடன்,அரச/அரச சார்பற்ற/ தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலம் ஓரளவு எழுத, வாசிக்க, பேசத் தெரிந்ததிருப்பதுடன் கணினி அனுபவ்மும் இருத்தல் வேண்டும்.

**ஆளணி நிர்வாகப்பகுதி,**
**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,**
**நடுவப்பணியகம்,**
**கிளிநொச்சி.**

(சி-12590)



## பணியாளர் தேவை

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பொற்காலம் வண்ணக்கலையகத்திற்காக பணியாற்றுவதற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆட்கள் தேவை.**

1) **கணினி இயக்குநர் (ஆண்)**

**Photo shop இல் முன் அனுபவமுள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**M.s. Office மேலதிக தகைமையாக இருத்தல் விரும்பத்தக்கது.**

2) **புகைப்பட பிடிப்பாளர் (இருபாலரும்)**

**தகைமை:- க.பொ.த (சாதாரணம் படித்திருத்தல் வேண்டும்)**

**சம்பளம்:- நேரில் பேசித்தீர்க்கப்படும்.**

**மேற்குறித்த பணிகளுக்கு ஆர்வமுடையோர் தங்கள் சுயவிபரத்துடன் 05.09.2005 இற்கு முன் யாழ்சாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள பொற்காலம் வண்ணக் கலையகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.**

○ **மற்றும் மேற்குறித்த பணிகளை பயிலவிரும்புவோரும் சமுகம் தரவும்.**

*நிர்வாகம்,*
*பொற்காலம் வண்ணக்கலையகம்,*
*யாழ். சாலை, கிளிநொச்சி.*

(சி-12619)



## ஆங்கில ஆசிரியர் பணிநிலைக்கான வேண்டுகை

பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய இரு பாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்:-** அ) பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்
ஆ) பட்டதாரிகள்
02. பட்டறிவு :- ஆங்கில ஆசிரியராக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியிருத்தல் வேண்டும்.
03. **அகவை** :- 30 தொடக்கம் 60 வரை
04. **வேண்டுகை முடிவு நாள்:-** 2005.08.31
05. **வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:-** பொறுப்பாளர்,
மனித வள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.
06. **நேர்காணல் நடைபெறும் நாள்:-** 03.09.2005
07. **நேர்காணல் நடைபெறும் இடம்** :- மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.
08. நேர்காணலுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றின் படிகளுடன் வருகை தரவேண்டும்.
09. **சம்பளம்:-** ஆசிரியராகத்தெரிவு செய்யப்படுவோரின் தகைமைக்கும் பட்டறிவுக்கும் ஏற்ப பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாத சம்பளம் வழங்கப்படும்.

**ஆளுகை,**
**மனித வள மேம்பாட்டுப்பகுதி,**
**நிதித்துறை.**

(சி .12583)



## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
16 - 08 - 1944



உதிர்வு
31 - 08 - 2002

**திதி 27.08.05**

**அமரர். திருமதி இராசமலர் அருளம்பலம்**

*குடும்பத்தின் குலவிளக்காய்*
*ஒளி வீசிய தெய்வமே*
*குறைகள் இல்லாது எம்மை*
*வாழ வைத்த தாயே*
*கூற்றுவன் உம்மைக் கவர்ந்து*
*எத்தனை ஆண்டுகள் ஆனாலும்*
*எங்களின் காவல் தெய்வமாய்*
*நெஞ்சினில் இருத்தி வணங்குவோம்.*

முகவரி
இல 52, D-10
உருத்திரபுரம்.

(6673)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

# இங்.அவுஸ் நான்காவது டெஸ்ட் முதல்நாள் முடிவில் இங்.229/4

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் பங்கேற்கிறது. தொடர் 1-1 என்ற நிலையில் சமநிலையில் இருக்க முக்கியமான நான்காவது டெஸ்ட் நாட்டிங்காமில் உள்ள டிரண்ட் பிரிட்ஜ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இங்கிலாந்து அணியில் தொடர்ந்து நான்காவது போட்டிக்கும் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை அவுஸ்திரேலிய அணியில் வலது முழங்கை காயம் காரணமாக அனுபவமிக்க மெக்ராத் இடம்பெற வில்லை. பதிலாக காஸ்பரோவிச் இடம்பெற்றார். இதேபோல் பார்மில் இல்லாத கிளெஸ்பி நீக்கப்பட்டு இளம்வீரர் ஷான்டெய்ட் அறிமுகமானார்.


நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கேல் வோர்ன் துடுப்பெடுத்தாடத் தேர்வு செய்தார். படுமோசமாகப் பந்து வீசிய பிரட்லீ, காஸ்பரோவிச் உதிரிகளை வாரி வழங்கினர். இதைப் பயன்படுத்திக்கொண்ட ரெஸ்கொதிக், ஸ்ரொஸ் விளாசித்தள்ளினர். புதுமுகவீர் ஷான்டெஸ்ட்டின் பந்து வீச்சு வேகமும் எடுபடவில்லை. இதையடுத்து வேறுவழியின்றி சுழலுக்கு மாறினார் பொண்டிங் வந்தார். 600 விக்கெட் சாதனை யாளர் வோர்னின் பந்தை ஸ்டிராஸ் ஸ்வீப்செய்ய,ஹைடன் அபார பிடியொன்றை எடுத்தார். இதை ஆட்டமிழப்பு இல்லை என்று கூறி நகர மறுத்தார் ஸ்டிராஸ். பின்னர் மூன்றாவது நடுவர் ஆட்டமிழப்பு என அறிவிக்க, மீண்டும் ஒரு முறை வோர்ன் சுழலில் வெளியே றினார் ஸ்டிராஸ். (35)



தனது அபார ஆட்டத்தைத் தொடர்ந்து ரெஸ் கொதிக் அரைச் சதத்தைக் கடந்தார். உணவு இடை வேளைக்கு பின்னர் மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. பின்னர் ஆட்டம் தொடங்கியபோது இங்கிலாந்து திடீர் சரிவைச் சந்தித்தது. டெய்ட் பந்துவீச்சில் ரெஸ்கொதிக் 65 (8பவுண்டரில், 1 சிக்ஸ்), இயான்பெல் மூன்று ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். சிறப்பாக துடுப்பாடிய வோகன் (58) பொண்டிங்கின் பந்துவிச்சில் வெளிறேினார். நேற்றைய முதல் நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் நான்கு விக்கெட் இழப்புக்கு 229 ஓட்டம் எடுத்து இருந்தது. பீட்டர்சன் (33), பிளின்டாப் (8) ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

# அவுஸ்.,சிம்பாப்வே வெற்றியால் அணி உறுதியான மனநிலையில் உள்ளது

## –பங்களாதேஷ் பயிற்றுவிப்பாளர்



அவுஸ்திரேலிய, சிம்பாப்வே அணிகளுக்கெதிரான போட்டிகளில் வெற்றி பெற்று உறுதியான மனநிலையிலிருக்கும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி சிறிலங்காவில் நடைபெறவிருக்கும் டெஸ்ட், மற்றும் ஒருநாள் போட்டிகளை வெல்லக்கூடியதாக இருப்பதாக அணியின் பயிற்றுனர் டேவ்வட்மோர் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பரில் இந்தியாவுக்கெதிரான போட்டியிலும் இவ் வருடம் யூன் மாதம் அவுஸ்திரேலியாவுடனான போட்டியிலும் பெறுமதியான வெற்றியைப் பெற்றுள்ள பங்களாதேஷ், சிம்பாப்வே டெஸ்ட் தொடரையும் வென்றது. அந்த வகையில் அணி சரியான பாதையில் வளர்ச்சி பெறுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடும்போது டெஸ்ட்போட்டிகளில் அணியின் திறமை வெளிப்படாதது உண்மை எனக் கூறியதுடன், இந்த டெஸ்ட் தொடரில் திறமையை வெளிப்படுத்த எதிர்பார்த்ததாகவும் இங்கிலாந்து பயணத்தின்போது நிறைய கற்றுக்கொண்டுள்ளதாகவும் வட்மோர் தெரிவித்துள்ளார்.

## உலக 11 பேர் அணியில்

# இன்சமாம் இணைக்கப்படுவதற்கு பாக்.கிரிக்கெட் சபை அதிருப்தி


உலக பதினொரு பேர் அணியில் இன்சமாமை சேர்க்காததற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிருப்தி தெரிவித்துள்ளது.

வரும் ஒக்ரோபரில் உலக பதினொரு பேர் அணி அவுஸ்திரேலியாவுடன் ஒரு டெஸ்ட் மூன்று ஒரு நாள் போட்டிகளில் மோதவுள்ளது. இதற்கான உலக பதினொரு பேர் அணி வீரர்கள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டனர். டெஸ்ட் ஒரு நாள் போட்டிகளுக்கான அறிவிக்கப்பட்ட அணியில் பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் உல்ஹக் சேர்க்கப்படவில்லை. இந்தக் கோபத்தைக் கொட்டித் தீர்த்து விட்டார் இன்சமாம். இவருக்கு ஆதரவாக பாக். கிரிக்கெட் சபையும், தங்களது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

இஸ்லாமபாத்தில் நேற்று அதிபர் முஷாரப்பைச் சந்தித்த பின்னர் பாக். கிரிக்கெட் போர்டு தலைவர் ஷாரியார் தான் கூறுகையில், உலக 11 பேர் அணியில் இன்சமாம் சேர்க்கப்படாதது அதிர்ச்சி அளிக்கின்றது. உலகின் தலைசிறந்த வீரர்களுள் அவரும் ஒருவர். ஆனால் இந்த வருத்தத்தை ஐ.சி.சிக்கோ, அதன் தேவர்வாளர்களுக்கோ தெரிவிக்க விரும்பவில்லை என்றார்.

இதற்கிடையில் உலக 11 பேர் அணியில் சச்சின் டெண்டுல்கர் சேர்க்கப்பட்டதற்கு ஆத்திரப்படுகிறார் பாகிஸ்தான் கிரிக்கெட் முன்னாள் தலைவர் ஜாகிர் அப்பாஸ், உலக 11 பேர் அணியில் இன்சமாம் சேர்க்கப்படாதது எந்தளவுக்கு அதிர்ச்சியான விடயமோ அதே அளவுக்கு சச்சின் சேர்க்கப்பட்டதும் அதிர்ச்சியான விடயமே. அவர் உலகத்தரம் வாய்ந்த வீரர் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அதே சமயம் நீண்ட நாட்களாக அவர் விளையாடவில்லை. உடல் தகுதியும் இல்லை. அவர் அணியில் சேர்க்கப்படும்போது சிறப்பாக விளையாடும் இச்சமாம் ஏன் சேர்க்கப்படக்கூடாது என்று கொதித்துப்போயுள்ளார் அப்பாஸ்.

# முக்கோணக் கிரிக்கெட் தொடர் நியூசிலாந்திடம் இந்தியா தோல்வி!



(ஹராரே)

சிம்பாப்வேயில் நடைபெறும் சிம்பாப்வே, நியூசிலாந்து-இந்திய அணிகளுக்கிடையிலான முத்தரப்புப்போட்டியில் நேற்று நடந்த நியூசிலாந்து இந்திய அணிகளுக்கிடையிலான போட்டியில் நியூசிலாந்து அணி 51 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பாடத்தொடங்கிய நியூசிலாந்து அணி ஆரம்பத் துடுப்பட்ட வீரர்களைச் சொற்ப ஓட்டங்களுக்குள் இழந்தபோதும் பின்வரிசை ஆட்டக்காரரான மைக்கலம், மைக் மிலன், ஓரம் ஆகியோரின் அபார ஓட்டத்தால் 215என்னும் இலக்கை எட்டியது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பம் முதலே பெரும் சரிவைச் சந்தித்தது ஒன்பதாவது விக்கெட் ஜோடியாக இணைந்த இர்பான் பதாவினதும்,ஜெயபிராகாஷ்ஜாதேவினதும் சிறப்பான துடுப்பாட்டத்தால் மோசமான தோல்வியில் இருந்து மீண்டு கௌரமான தோல்வியைப்பெற வழி ஏற்பட்டது. ஒன்பதாவது விக்கெட் இணைப்பாட்டமாக பதான்-ஜாதேவ் 118 ஓட்டங்களைப் பெற்றதோடு, இருவரும் அரைச்சதங்களைப் பூர்த்திசெய்தனர். நியூசிலாந்து தரப்பில் சேர் பொண்ட் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.







டில்லியில் நடந்த விழாவில் உலக 11 பேர் அணி வீரர்களுக்கான சீருடையைப் பத்திரிகையாளர்களிடம் காண்பிக்கிறார் ஐ.சி.சி. தலைமை நிர்வாகி மால்கம் ஸ்பீடு. அருகில் மந்திரா பேடி.

# பிற்போடப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சங்கம் நடாத்தும் மென்பந்தாட்டப் போட்டிகள் தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டை முன்னிட்டு பிற்போடப்பட்டுள்ளன. இப்போட்டிகள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். எனவே தகுதிபெற்ற அணிகளுக்கு இப்போட்டிகள் நடைபெறவுள்ள திகதிகள் பற்றிய விபரம் அறியத்தரப்படும் என்பதையும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சங்கத்தினர் அறியத்தருகின்றனர்.

# இந்-கிரிக்கெட் அணி வீரர்கள் மீது நடவடிக்கை!

இந்திய கிரிக்கெட் அணி கடந்த திங்கட்கிழமை நள்ளிரவில் சிப்பாப்வே புறப்பட்டது. இதற்காக திங்கட்கிழமை பிற்பகலிற்குள் வீரர்கள் அனைவரும் முப்பை நட்சத்திர விடுதி ஒன்றில் ஆஜராகவே வேண்டும் என கிரிக்கெட் சபை உத்தரவிட்டது. பல வீரர்கள் இந்த உத்தரவைக் காற்றில் பறக்கவிட்டனர். அணித் தலைவர் சவுரவ் கங்குலி, முகமது கைப், ஹர்பஜன், அகார்கர் போன்ற வீரர்கள் இரவு 9.00 மணிக்கு மேல்தான் வந்து சேர்ந்தனர்.

பயிற்சியாளர் கிரிக்கெட் சப்பல் இந்த விடயத்தில் கடும் அதிருப்தியடைந்தார். குறிப்பாக அன்று மாலை கங்குலியும், அவரும் இணைந்து நிருபர்களைச் சந்திப்பதாக இருந்தது. கங்குலியின் தாமதத்தால் சப்பல் மட்டும் தனியாக நிருபர்களைச் சந்தித்தார். தனது கோபத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். சப்பல் இதையடுத்து தாமதமாகவே வந்த வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்க கிரிக்கெட் கோர்டு திட்டமிட்டுள்ளது.



வீரர்கள் ஏன் தாமதமாக வந்தார்கள் என்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்திய அணி முகாமையாளருக்கு உத்தரவிட்டிருக்கின்றோம். தாமதமாக வந்த ஒவ்வொரு வீரரும் அதற்கான காரணத்தை விளக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் என்றால் நடவடிக்கை இராது அலட்சியமாக இருந்திருப்பார்களேயானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசிலிப்போம் என்கிறார் கிரிக்கெட் சபை செயலாளர் நாயர்.

# டெவன் போட்டிக்கு இரு வெற்றிகள் தேவை

உலக பெண்கள் டென்னிஸ் வரிசையில் லிண்சே டெவன் போட் முதலாமிடத்தைப் பெறுவதற்கு இன்னும் ஒரு வெற்றியை மட்டும் பெறவேண்டியிருக்கின்றார்.

நியூகெவனில் நடைபெறும் பைலட்பென் சுற்றுத் தொடரில் அவர் டெனிலா ஹஞ்சுசொவானது வெற்றி கண்ட பின்னர் இந்த நிலைக்கு முன்னேறியுள்ளார்.

இரு மாதமாக காயம்காரணமாக போட்டிகளில் பங்கு பற்றாதிருந்த டெவன் போட் கடந்த திங்களன்று நடைபெற்ற போட்டியில் ரஷ்ய வீராங்கனை மரியாசரபோவாவிடம் 6-2, 7-6, 7-5 என்ற செட்டில் தோல்வியடைந்ததில் பின்னணிக்குத் தள்ளப்பட்டார்.

டெவன் போம் அடுத்து ரஷ்யாவின் அனாசக் விடட்ஸை எதிர்த்து ஆடுவார்.

# வைத்தியர் அனுமதித்தால் மட்டுமே



வைத்தியர் அனுமதித்தால் மட்டுமே சிம்பாப்வே போட்டியில் ஆடுவேன் என்று சச்சின் டெண்டுல்கர் கூறினார்.


சிம்பாப்வேயில் அடுத்த மாதம் (செப்டெம்பர்) 13 ஆம் திகதி தொடங்கும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான அணியில் டெண்டுல்கரின் பெயர் இடம்பெற்றுள்ளது.

சத்திரசிகிச்சைக்குப் பின்னர் குணம் அடைந்து வரும் டெண்டுல்கர் இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார். அவர் கைக்கு அதிக வேகம் கொடுக்காத வகையில் இலகுவான பயிற்சி எடுத்து வருகின்றார்.

சிம்பாப்வேப் போட்டிக்கு முன்பு டெண்டுல்கர் முழு உடல் தகுதி பெறுவாரா? என்பது சந்தேகம் தான். இந்த நிலையில் டெண்டுல்கர் அளித்த ஒரு பேட்டியில் கூறி இருப்பதாவது:- காயம் அடைந்த கையில் மீண்டும் பாதிப்பு வந்து விடக் கூடாது என்பதற்காக கொஞ்சம், கொஞ்சமாக வலுவான பயிற்சிகளைப் பெற்று வருகிறேன்.

சிம்பாப்வே போட்டிக்கு செல்ல மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். இருப்பினும் இந்த விடயத்தில் வைத்தியர்தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும். அவர் அனுமதித்தால் மட்டுமே விளையாடுவேன் அவசரப்பட மாட்டேன்.

நான் இந்த விடயத்தில் அவசரப்பட்டு எந்தவித முடிவையும் எடுக்க விரும்பவில்லை. இன்னும் நீண்ட நாட்கள் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கு தகுந்த மாதிரித் தான் நடக்க முடியும் என்று டெண்டுல்கர் கூறினார்.



### சிந்தனைக்கு

எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## பேச்சிற்கு அரசு தயாரில்லை!

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலோ அன்றி வெளிநாடுகளிலோ பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக இல்லை.கொழும்பிலோ அன்றி இராணுவ சூனியப்பிரதேசத்திலோ அரசாங்கம் பேச்சுவாத்தை நடத்தத்தயாராகவுள்ளது என்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்தின் முடிவானது தற்பொழுது அரசாங்கம் பேச்சுவார்த்தை எதையும் நடத்தத்தயாராக இல்லை என்பதன் அறிவிப்பாகவே எடுத்துக்கொள்ளத்தக்கதாகும்.

லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டபோது யார் சுட்டவர்கள் என்பது கேள்விக்குள்ளானதாக இருந்த் போதும், மோசமடைந்து செல்லும் யுத்த நிறுத்த உடன்பாடே இத்தகைய நிகழ்வுக்கு காரணம் எனக்கூறப்பட்டதுண்டு. இதற்குச் சனாதிபதி சந்திரிகா அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கத்தில் காட்டிய அசிரத்தை காரணம் குற்றச் சாட்டும் எழுந்தது.

இந்நிலையிலேயே கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளுடன் உயர்மட்டப்பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடுகளைச் செய்துதருமாறு நோர்வே அரசிடம் சந்திரிகா கோரினார். இதனை நோர்வேத் தரப்பு விடுதலைப்புலிகளிடம் அறிவித்து விடுதலைப்புலிகளின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டது. ஆதலால் தற்பொழுது வெளிநாடுகளில் பேசப்போவதில்லை என்ற அறிவிப்பானது அரசாங்கம் மீண்டும் ஒரு தடவை தப்புக்கணக்குப் போட்டுவிட்டது என்றே எண்ண வைக்கின்றது.

அதாவது நோர்வேத் தரப்பு ஊடாக விடுதலைப்புலிகளுடன் நேரடிப்பேச்சுவார்த்தைக்கு விடுக்கப்பட்ட அழைப்பை விடுதலைப்புலிகள் தரப்பு நிராகரிக்கும் என்ற எதிர்பார்க்கையே அரசாங்கத்திடம் இருந்திருத்தல்கூடும். ஏனெனில் அரசாங்கம் அமுல் செய்துள்ள அவசரகாலச்சட்டம், தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் நெருக்கடிகள் எனபனவற்றைக் கொண்டு புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகள் நடத்தச்சம்மதிக்கமாட்டாது என்ற எண்ணப்பாடு அரசாங்கத்திடம் வளர்ந்திருந்தது.

ஆனால், புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தமையானது சனாதிபதி சந்திரிகாவிற்கு எத்தகைய முடிவுகளை மேற்கொள்வது என்பதில் பெரும் சிக்கலை தோற்றுவித்ததெனலாம். அதாவது பேச்சுவார்த்தையானது யுத்த நிறுத்த உடன்பாட்டை எவ்வாறு செம்மையாக அமுல்படுத்துவது என்பதானதாக இருக்குமானால் அது அரசிற்கு நெருக்கடியைத் தோற்று விப்பதானதாகவே இருக்கும்.

ஏனெனில் 2002இல் கைச்சாத்தாகிய யுத்த நிறுத்த உடன்பாட்டில் பலமுக்கிய சரத்துக்கள் அமுல் படுத்தப்படவில்லை. பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானால் இவை குறித்த வினாக்கள் முக்கியமானவையாகி விடும். ஆனால் அரசாங்கம் அது குறித்து உருப்படியான பதில் ஏதும் கூறமுடியாத நிலையிலேயே தற்பொழுது உள்ளது.

இது ஒரு புறம் இருக்க அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதை ஜே.வி.பி. விரும்பவில்லை. ஜே.வி.பி.க்கும் சிறிலங்காசுதந்திரக்கட்சிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு கூட்டணி அரசாங்கத்தில் ஜே.வி.பி இருந்து வெளியேறியது ஆயினும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பி.யும் நெருக்கடியான வேளைகளில் இணக்கமான போக்கைக் கைக்கொண்டவையாக இருந்துள்ளன.

அதிலும் தற்பொழுதுள்ள அரசியற் சூழ்நிலையில்– அதாவது சனாதிபதித் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளவுள்ள நிலையில் இவ்விருகட்சிகளும் எதிரும் புதிருமான நிலைப்பாட்டை மேற்கொள்ளும் என எதிர்பார்பதற்கில்லை. ஏனெனில் அத்தகைய நிலையானது இருதரப்பையும் வெகுவாகப்பாதிக்கும் என்பது இருதரப்பிற்குமே தெளிவாகத்தெரியும்.

அதாவது சனாதிபதித் தேர்தல் எதிர்கொள்ளப்படும் வேளையில் ஜே.வி.பி.யின் கூட்டின்றி ஆட்சி அதிகாரத்தை நினைத்துப்பார்க்கக்கூட முடியாது–தனது வெற்றிக்காக என்பது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தெரியாததல்ல. அதிலும் குறிப்பாகச் சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி.யுடனான உறவை இரகசியமான முறையிலாவது பேணுவதில் குறியாகவுள்ளார்.

ஆனால் ஜே.வி.பியோ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதைத் தீவிரமாக எதிர்த்து வருகின்றது. அதாவது புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படுமானால் ஜே.வி.பி.யுடனான உறவு பாதிப்பிற்குள்ளாவது தவிர்க்கமுடியாததாகிவிடும் இதை ஒத்ததாகவே ஜாதிக ஹெலஉறுமயவின் நிலைப்பாடும் உள்ளது.

இத்கையதொரு நிலையில், சந்திரிகாகுமாரதுங்க அரசாங்கத்தின் செயற்பாடுகளே யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவரும் நிலையைத் தோற்றிவித்துள்ளது என்ற குற்றச்சாட்டைப் போக்கவும். அதேசமயம், ஜே.வி.பி,ஜாதிகஹெல உறுமய போன்ற சமாதானமுயற்சிகளுக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் எதிரான சக்திகளையும் திருப்தி தரும்வகையிலும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமே முறையே பேச்சுவார்த்தைக்கு வருமாறு நோர்வே ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பும், இலங்கைக்குள் பேச்சுவார்த்தை என்ற அரசின் தீர்மானமும் ஆகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் மட்டுமல்ல சிங்கள ஆட்சியாளர்கள் அனைவருமே இத்தகைய தந்திரங்களைக் கையாள்வது வழமையாகும். ஆகையினால் இப்பந்தியில் இதனை விபரிக்காமலேயே தமிழ் மக்கள் இதனை விளங்கிக்கொண்டிருப்பார்கள். இருப்பினும் எமக்குள்ள கட்பாடு இதனை ஒரு தடவை சுட்டிக்காட்டவேண்டியதாகியுள்ளது.

# சிறிலங்காவின் வெளிநாட்டு கடன்தொகை ௯ கோடியே ௯௬ ஆயிரத்து 138 மில்லியன் ரூபாய்!

### -பாராளுமன்றில் நிதியமைச்சர் தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு ஒன்பது கோடியே 96 ஆயிரத்து 138 மில்லியன் ரூபாய்களை சிறிலங்கா கடனாக செலுத்த வேண்டியுள்ளது என நிதியமைச்சர் சரத் அமுனுகம நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.ஜே.வி.பி.யினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது நிதியமைச்சர் கூறுகையில்,

இந்த ஆண்டு திரும்பச் செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன் தொகை 39299.4 மில்லியன் ரூபாய்களாகும். இதற்கான வட்டி 18,203 மில்லியன் ரூபாய்களாகும்.

இதேவேளை திருப்பிச் செலுத்த வேண்டிய உள்நாட்டு கடன் 22500.2 மில்லியன் ரூபாய்களாகும். இதற்கான வட்டித் தொகை 10800 மில்லியன் ரூபாய். உள்நாட்டு வருமானம் போதாத நிலைமையிலேயே வெளிநாடுகளிலிருந்து கடன்களைப் பெறவேண்டியுள்ளது என அமுனுகம தெரிவித்தார்.

# நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கு மகிந்தவிடம் தீர்வு உள்ளதா?

### - ஐக்கிய தேசியக் கட்சி சாடுகிறது

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ நாட்டின் பிரச்சினைகள் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை வெளியிடவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எல். பீரிஸ் தாம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நாட்டில் இனப்பிரச்சினை இருப்பது தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ வெளிக்காட்டும் நிலைப்பாடு என்ன? அவ்வாறு இனப்பிரச்சினை ஒன்று இருப்பதாக பிரதமமந்திரி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்வாராக இருந்தால் அதற்காக முன்வைக்கும் தீர்வு என்ன? என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்

போர் நிறுத்த உடன்பாட்டை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்கிறாரா? அவ்வாறெனில் அதனை நடைமுறைப் படுத்தும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அவர் இணங்குகிறாரா? அல்லது போர் நிறுத்த உடன்பாட்டில் திருத்தம் செய்ய வேண்டும் என்பத னையா அவர் வலியுறுத்துகிறார்? போர் நிறுத்தம் தொடர்பில் மாத்திரம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திவிட்டு இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தப்போகிறாரா இல்லையா?

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சிறிலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி ஒஸ்லோவில் இணங்கிக்கொண்ட சமஸ்டி முறையை ஏற்றுக்கொள்கிறாரா? அல்லது அதற்கான மாற்று யோசனைகளை அவர் கொண்டிருக்கிறாரா? என்றும்,.ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக் கட்டமைப்பை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்கிறாரா? என்றும், வினா எழுப்பிய ஜி.எல்.பீரிஸ் இதேவேளை நாட்டின் பொருளாதாரம் மற்றும் படுகொலைகளை நிறுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவிக்காகப் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷ என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகிறார்.? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்கிடையில் இனப்பிரச்சினை தீர்வு பேச்சு வார்த்தையில் முஸ்லிம் தனிப்பிரதிநிதித்துவத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டிருப்பதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எல் பீரிஸ் மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்வியையும் தொடுத்தார்.

# ஐக்கிய இலங்கையே எமது குறிக்கோள் நாம் இன்னுமொரு போரை விரும்பவில்லை

### - பிரதமர் மகிந்த கூறுகிறார்

(கொழும்பு)

நாம் இன்னுமொரு போரை விரும்பவில்லை, எமது குறிக்கோள் ஐக்கிய இலங்கையே என சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.பதுளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் உரையாற்றுகையில், சகல மக்களிற்கும் அதாவது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவருக்கும் சமாதானம் தேவை அபிவிருத்தி வேலையுடன் சமாந்தரமாக அரசாங்கம் ஏற்கனவே பல தரப்பட்ட சமூகங்களுக்கிடையில் சமாதானத்தை கட்டியெழுப்பும் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளது. என்றும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில; இது ஒரு சனநாயகநாடு மக்கள் சுதந்திரமாக வாழும் உரிமையைக் கொண்டுள்ளனர். இதற்காக கூட்டணி அரசுஅர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளது. நாம் நாட்டில்சமாதானத்தை அடைவதில் பெருமையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். யாருக்கும் சமாதானத்தை எதிர்க்கும் உரிமை கிடையாது. சமாதானத்தை நிலை நாட்டுவது அரசின் கடமை எனவும் கூறினார்.

# ஊடகவியலாளரை தாக்கும் அதிகாரம் ஜே.வி.பி.க்கோ வேறு யாருக்குமோ இல்லை

### -சுதந்திர ஊடக அமைப்பின் தலைவர் கருத்து

(கொழும்பு)

ஊடகவியலாளர்களைத் தாக்கும்அதிகாரம் ஜே.வி.பி.யினருக்கோ,பொது ஜன ஐக்கிய முன்னணியினருக்கோ,அல்லது வேறு எவருக்குமோ, கிடையாது என சுதந்திர ஊடக அமைப்பின் தலைவர் சுனந்த தேசப்பிரியா தெரிவித்துள்ளார்.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் பத்திரிகைப் பகுப்பாய்வு வழிகாட்டலும் சம்பந்தமாக நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது சுனந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தாவது::

வீரகேசரி பத்திரிகையின் குருநாகல் பிராந்திய நிருபர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக பொலிசார் இது வரைக்கும் தெளிவான பதிலைத் தர மறுக்கின்றனர்.

ஜே.வி.பி.யினரின் ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச்சென்ற சுடர் ஒளி பத்திரிகை நிருபரும் பலமாகத் தாக்கப்பட்டு பின்னர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய தெளிவான விபரங்களைக் கூடத் தர மறுக்கும் பொலிசாரின் செயற்பாடு எம்மை மிகுந்த விசனத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இவ்வாறான ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்கள் பாதுகாப்புத் தொடர்பாக எழுந்துள்ள அச்சுறுத்தல்கள் குறித்து பி.பி.சி. போன்ற அனைத்துலக ஊடகங்களுக்கு வெளிப்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இவையனைத்தையும் வன்மையாகக் கண்டிப்பதோடு இவற்றுக்கெதிராக சட்ட ரீதியாகவும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் நடத்த எண்ணியுள்ளோம் எனத்தெரிவித்தார்.

## மூன்று பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வு

(கொழும்பு)

முன்னாள் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் கருணாரட்ண மேஜர் ஜெனரலாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.இவர் குடாநாட்டிலுள்ள 55ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார். பிரிகேடியர், பராக்கிரம பன்னிபிட்டிய, பிரிகேடியர் திசா ஜயவர்த்தன ஆகியோரும் மேஜர் ஜெனரல்களாகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.இவர்களில் பன்னிப்பிட்டிய யாழ். குடாநாட்டிலுள்ள 51ஆவது படையணியின் கட்டளையதிகாரியாகவும், ஜெயவர்த்தன யாழ்.குடாநாட்டிலுள்ள 53 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மகிந்தவிற்கு ஆதரவளித்தால் தொண்டமானுக்கு 300மில்-ரூபா!

(கொழும்பு)

வர இருக்கும் சனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்குவதற்கு 300மில்லியன் ரூபா கையூட்டல் பெறுவதற்கு பேரம் பேச்சு நடைபெற்றுவருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.அண்மையில் ஐ.தே. கட்சி தலைவரும் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க ஹற்றன் நகரிலும் பதுளை நகரிலும், நடத்திய கூட்டத்திற்கு இ.தொ காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் அழைக்கப்படவில்லை.இதற்கு பழிவாங்கும் நோக்கில் ஆறுமுகம் தொண்டமான் இந்த முடிவிற்கு வந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலை ஆட்சேபித்து நேற்றும் ஆர்ப்பாட்டம்

தமிழ் ஊடகங்களின் பணிமனைகள் தாக்கப்பட்டு வதையும், ஊடக வியலாளர்கள் தாக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவதையும்,




கண்டித்து நேற்று மாலை 4-30 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் நடை பெற்றுள்ளது.இதில் குறிப்பாக வீரகேசரி நிருபர் கைது செய்யப் பட்டமை, சுடரொளி காரியாலயத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல், ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்ட சுடரொளி நிருபர்மீதான தாக்குதல் சம்பவம் என்பவை தொடர் பாக கண்டனம் தெரிவிக்கப் பட்டது.இப்பேரணியில் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், மேல்மாகாண மக்கள் முன்னணித்தலைவர் மனோ.கணேசன் மற்றும் துணைத் தலைவர் குமரகுருபரன் போன் றோரும் மற்றும் தமிழ்,சிங்கள ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப்பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

-வணிக வாரத்தை முன்னிட்டு-

# பள்ளிச் சேமிப்பு அலகு தமிழீழ வைப்பகத்தால் அறிமுகம்

(அலுவலக செய்தியாளர்)

வணிகவாரத்தை முன்னிட்டு பள்ளிச் சிறார்களின் வருங்கால நலன் கருதி இளவாழ்கை (சமூகப்பொறுப்புகளையும் உளமூட்டி வளர்க்க தமிழீழ வைப்பகத்தினரால் அறிமுகப்படுத்தப்படும் பள்ளிச்சேமிப்பு அலகு நேற்றுக் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பெற்றது.



தமிழீழ வைப்பக தலைமை ஆளுகைப்பகுதி அலுவலர் மா.சுதர்சன் தலைமையில் பள்ளிச் சேமிப்பு அலகு சேமிப்பு திட்டப் பெயர் பலகையினை கிளிநொச்சி கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி. அரியரத்தினம் திரைநீக்கம் செய்துவைக்க,செயலகத்தினை தமிழீழ கல்விக்கழகப்பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நாடாவினைவெட்டிதிறந்துவைத்து முதலாவது சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து வைத்தார்.

அடுத்து சிறப்புரையினை தமிழீழக்கல்விக்கழகப்பொறுப்பாளர் வெ.இளங் குமரன், தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் க.பாலகிருஸ்ணன் ஆகியோர் வழங்கினர்.மேற்படி பள்ளிச்சேமிப்பு அலகு அமுதம் சேமிப்பு திட்டத்தில் 10,000 ரூபாவிற்குமேல் வைப்பிலிட்டமாணவர்களுக்கான பரிசில்களை மத்திய கல்லூரிஅதிபர் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## இவ்வாண்டே....

ரசர்கள் அடங்கிய குழு இந்தத் தீர்மானத்தை எட்டியிருக்கின்றது.

அடுத்த சனாதிபதித்தேர்தலை இவ் ஆண்டு நடத்த உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் தீர்ப்பை அறிவித்த போது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தமது தீர்மானத்தை வெளியிட்டார்கள்.

அரசியல் யாப்பின் பிரமாணங் களுக்மைய சனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் ஆறு வருடங்களாகும். அவர் தேர்தலில் வெற்றி பெற்ற தினம் தொடக்கம் பதவிக்காலம் ஆரம்பமாகின்றது. இதன் பிரகாரம் தற்போதைய சனாதிபதியின் பதவிக் காலம் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமாவதாகக் கருதி அடுத்த சனாதிபதித் தேர்தல் நடத்துவதற்கான தினத்தை தேர்தல் ஆணையாளர் தீர்மானிக்க வேண்டும் எனப் பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

நீதியரசர்கள் நிகால் ஜயசிங்க, எஸ்.கே, உதலாகம, நிகால் திஸாநாயக்க காமினி அமரதுங்க ஆகியோர் இந்த மனுவை விசாரித் தார்கள். இந்த மனு மீதான விசாரணை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான அன்றையதினம் ஜாதிக ஹெல உறுமய சார்பாக ஆஜரான சட்டத்தரணி மகோகர சில்வா தற்போதைய சனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலம் 1999ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமாவதால் அடுத்த சனாதிபதித் தேர்தலை கட்டாயமாக 2005 ஆம் ஆண்டில் நடத்த வேண்டுமென வாதிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் வாதிட்ட சனாதிபதி சட்டத்தரணி எச். எல்.டி சில்வா 1994 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட தற்போதைய சனாதிபதியின் முதல் பதவிக்காலம் 2000ஆம்ஆண்டு நவம்பர்மாதம் முடிவடைவதாகத் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் சனாதிபதி 2006 ஆம் ஆண்டு வரை பதவியில் அமர்ந் திருந்திருக்கலாம் என அவர் தெரிவித்தார்.

## இராணுவத்தின...

ஒருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்டவைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டு மேலதிக சிகிச்சையின் பொருட்டு வைத்தியர்களின் உதவியுடன் நோயாளர்காவு வண்டி மூலம் வவுனியாஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லபபட் டுள்ளார். ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடியினை சென்றடைந்த பொழுது இராணுவத்தினர் காயமடைந்து இரத்தப்பெருக்குடன் இருந்த நபரை கண்ணுற்ற பொழுதிலும், நோயாளர் வண்டியினை உடன் செல்வதற்கு அனுதிக்காது பல நிமிட நேரம் தாமதித்து செல்ல அனுமதித்த தனையடுத்து மேற்படி நபர்வவுனியா ஆதார வைத்தியசாலையில் சென்று அனுமதிக்கப்பட்ட சிலநிமிட நேரத்தில் மரணமாகியுள்ளார். இரத்தப் பெருக்கின் காரணமாகவே மேற்படி மரணம் சம்பவித்துள்ளதெனவும், பதினைத்து நிமிடங்கள் முன்னதாக இவரை சிகிச்சைக்குட்படுத் தியிருப்பின் உயிரைக் காப்பாற்றி யிருக்க முடியுமெனவும், இராணுவத் தினரின் அசமந்த போக்கின் காரணமாகவே மேற்படி நபரின் உயிர் பிரிய நேரிட்டதெனவும் உதவிக்குச் சென்ற வைத்தியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியாவைச்சேர்ந்த அழகன் கிருஷ்ணன் (வயது-50)என்ற குடும்பஸ்தரே விபத்தினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கின் காரணமாக மரணமானவர் என்பதுகுறிப்பிடத் தக்கது. (சோ)

## தமிழீழ....

இதனையடுத்து தமிழ் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரகுமார் சாவகச் சேரிக்குச் சென்று பொதுஅமைப் புகளின் பிரதிநிதிகளைச் சந்தித் ததுடன் படையினரின் நடவடிக் கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

## தேர்தல்...

தயானந்த திசாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார். இந்நிலையில் நவம்பர் 18 ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடும் என்று தெரிகிறது.

இது தொடர்பான அறிவிப்பை வெளியிடுவதற்கான நவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் ஒக்ரோபர் 15ஆம் திகதி வரை வேட்பு மனுக்கள் பெறப்படும் என்றும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.2004 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்குப் பயன் படுத்த வாக்காளர் பதிவேட்டில் கூடுதலாக சேர்ப்பிக்கப்பட்டு அந்த பதிவேடே பயன்படத்தப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

## பாடசாலை....

புத்தர்சிலை விவகாரத்தையடுத்து திருமலை நகரில் பரவலாக பெரும் எண்ணிக்கையில் படையினர் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். இதனால் திருமலைநகரம்படையினரின் முற்றுக்கைக்குள்ளானதாகக் காட்சி யளிக்கின்றது.படையினரின் எண்ணிக் கையைக் குறைக்கும் படி கோரியும் பயனளிக்காத நிலையில் பாடசாலை களுக்கு அருகில் நிறுத்தப்பட்டுள்ள படையினரை அகற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. இக்கோரிக்கையை வலியுறுத்தியே ஒருநாள்பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடத்தும்படி திருகோணமலை மாவட்டத் தமிழ் மாணவர் அமைப்பு அழைப்புவிடுத்திருப்பதாகஅமைப் பின்முக்கியஸ்தர் தெரிவித்தார். (25)

## மட்டக்களப்பை...

பதில்:- முதலில் கருணா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதி என்பது மட்டக்களப்புக் காட்டுப்பகுதியில் மட்டுமல்ல வேறு எங்குமே கிடையாது. பொலநறுவை மாவட்டத்தின் படைக்கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் படையின் அனுசரணையுடன் இருக்கும் வேறு ஒட்டுப்படையாட்களுடன் கருணா விசுவாசிகள் இருக் கின்றார்கள். அதைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்று உறுதிப்படுத்தியதாக அறிகின்றோம். அவர்களின் செயற்பாடுகளைக் கட்டுப் படுத்துவது அரசின் பொறுப்பல்ல வென்றால் அரசு கையெழுத்திட்டுள்ள போர்நிறுத்த உடன்படிக்கை கேள்விக் குறியாகிவிடும்.

கேள்வி:-

**இப்போது மட்டக்களப்பில் அரசியல் பணியில் ஈடுபட்டிருக் கும் போராளிகளின் பாதுகாப்பு எவ்வாறு இருக்கிறது.**

பதில்:- புரிந்துணர்வு உடன்படிக் கையின்படி படைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகளினதும் உறவினர்களைச் சந்திப்பதற்காக விடுமுறையில் படைக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் போராளிகளினதும் பாதுகாப் பிற்கு அரசே பொறுப்பாகும். ஆனால் அரசு அந்தப் பொறுப்பை மதிக்கத் தவறிவிட்டது. தற்போதுள்ள சூழ லில் எமது போராளிகள் மக்களின் பாதுகாப்பிலேயே அரசியல் பணி களில் ஈடுபடுகின்றார்கள். போராளிகளில் கை வைத்தால் மக்களின் கொந்தளிப்பிற்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதும் அரசிற்குத் தெரியும்.

கேள்வி:-

**பொதுமக்களுக்கு வழங்கப் படும் தற்காப்புப் பயிற்சி மூலமாக மக்களுக்கு இனிமேல் யுத்த மொன்று தொடங்கும்போது பாதிப்பு ஏற்படாது தடுக்க இயலுமா? எவ்வாறு அது சாத்தியமாகும்? ஏனெனில், பல முனைகளிலும் படையினர் தொடுக்கக் கூடிய தாக்குதல் களில் இருந்து அது பாதுகாப் பளிக்குமா?**

பதில்:- அதனுடைய பெயரே தற் காப்புப் பயிற்சி. அது வலிந்த தாக் குதலுக்கோ அல்லது வேறு போர் நடவடிக்கைகளுக்கோ பயன்படுத் துவது அல்ல. ஆனால் சிறிலங்கா அரச படைகளின் கண்ணியம் உலக றிந்தது. பேரொன்று எங்கள் மீது மீண்டும் திணிக்கப்படுமானால் பொது மக்களை இலக்கு வைத்து வான் வழியில் மற்றும் பீரங்கிகளால் சிறி லங்கா அரச படைகள் நடத்தக் கூடிய தாக்குதல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கும் இன அழிப்புச்செயற்பாடுகளில் ஈடுபடும் சிறிலங்காப்படைகளின் மிலேச் சத்தனங்களில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்குமே அந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

கேள்வி:-

**யுத்தமொன்று நாளையே வெடிக்குமானால் மட்டக்களப்பு பிராந்தியத்தை நீண்ட காலத் திற்கு தக்கவைக்க உங்களால் முடியுமா?**

பதில்:-நீண்ட காலத்திற்கல்ல நிரந்தரமாகவே எங்களால் தக்க வைக்க முடியும். மக்கள் சிங்கள அரசின் கபடத்தை முழுமையாக அறிந்திருக்கின்றார்கள். போரை ஆரம்பித்து தமிழ்மக்களின் தேசியத்தை நிலைநாட்டும்படி தலைவருக்கு மகஜரும் தந்திருக் கின்றார்கள். ஆகவே, மக்களின் உணர்வெழுச்சியுடன் கூடிய போரொன்று நிகழுமானால் இந்த மாவட்டத்தின் ஒரு பகுதியை ஆக்கிர மித்திருக்கும் சுமார் ஐயாயிரம் வரையான சிறிலங்கா ஆயுதப் படைகளை வெளியேற்றி நிரந்த ரமாகவே தக்கவைக்க முடியும்.

இங்கே நடைபெறுகின்ற எழுச்சி நிகழ்வுகளிலும். பேரணிகளிலும் மக்கள்தங்கள் நிலைப்பாட்டை அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின் றார்கள். மேலும் இந்த மாவட்டத்தின் எண்பது வீதம் வரையான தரைப் பகுதி எமது கட்டுப்பாட்டில் இருக் கின்றது. அதிலே தமிழீழத்தின் அனைத்து நிர்வாக அலகுகளும் முறையாக இயங்கி வருகின்றன.

சிறுவர்ஆட்சேர்ப்பு என்பது ஒரு தவறான குற்றச்சாட்டு படையில் சேர வருபவர்களின் வயதுகள் உடனுக் குடன் பரிசீலிக்கப்பட்டு வயதெல் லையை அடையாதவர்கள் மாவட்டத் தலைமைச்செயலகத்தின் மூலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படு கின்றார்கள். சில ஊடகங்களே தவ றான மாயையை ஏற்படுத்தி வரு கின்றன என அவர்கூறியுள்ளார்.

## விடுதலையின்...

பட்டறையில் சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்டு சிறப்பு ரையாற்றுகையிலேயே அரசியல் துறைப்பொறுப்பாளர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில் சுடரினையும் தேசியக்கொடியினையும், சு.ப. தமிழ்ச் செல்வன் ஏற்றிவைக்க தமிழர் புனர் வாழ்வுக் கழகக் கொடியை திலீபன மருத்துவப் பிரிவைச் சேர்ந்த தேவா அவர்களும், குமா சிறுவர் பூங்காக் கொடியை ஊரக வளர்ச்சிப்பணிப் பொறுப்பாளர் . கந்தனும் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து சு.ப.தமிழ்ச் செல்வன் சிறப்புரையாற்றுகையில்: தென்மராட்சியில்சிறுவர்கள்சிலர் மண்ணில் விளையாடிக்கொண்டிருந்த போது பார்த்த எமது தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் அந்தப் பிள்ளைகளின் ஊதிய வயிறும், உட் குவிந்த விழிகளும், போசாக்கற்ற நிலையைக் காட்டுவதாகவும், இந்த நிலையை மாற்ற சிறுவர் போசாக்குப் பூங்காக்களை அமைத்து அவற்றுக் கூடாக எமது எதிர்காலச் செல்வங் களாகிய சிறுவர்களை ஆரோக்கிய மானவர்களாக மாற்றும் வேலைத் திட்டச்செயற்பாடுகளை முன்னெடுக்கு மாறு கூறினார். அந்தக் கூற்றின் பிரகாரமாகவே இத்தகைய சிறுவர் பூங்காக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பூங்காக்களின் சிறு வர்களுக்கூடாக அவர்களது பெற் றோரை அணுகுங்கள். போசாக்கு நிறைந்தவர்களாக, சுகாதாரமாக பிள் ளைகளை வளர்க்கும்நிலையை உருவாக்குதல், சேமிப்புப்பழக் கங்களை ஏற்படுத்துதல். நாடகம், நடனம் போன்ற கலை நிகழ்வுகளிற் கூடாக பிள்ளைகளையும், பெற்றோர்களையும் உங்களோடு இணைத்து செயற்கை உணவு வகைகளைக் குறைத்துபால் போன்ற, மற்றும் ஏனைய இயற்கை உணவு வகைகளை உண்ணவைக்கும் நிலையை ஏற்படுத்துங்கள். இந்த நிலையினூடாக எமது விடுதலையின் அர்த்தம் செறிந்த ஒரு சமுதாயமாக இவ் இளைய சமுதாயத்தை வளர்த் தெடுக்க உதவுங்கள். யுத்தத்தின் விளைவுகள் எம்மைத் தாக்காமல் தற்காத்துக்கொள்வதற்கு இத்தகைய வேலைத்திட்டங்களும், அதற்கூடான பணிகளும் காத்திரமானவை என் பதை மனதிற்கொண்டு ஐந்து வயது வரையான குழந்தைகளை இச் சமூகத்தின் அத்திவாரங்களாகக் கருதி பணிபுரியுங்கள். அதுதான் காலத்திற்கேற்றதும், எதிர்காலம் பற்றிய எமது எதிர்பார்ப்போடு சமூகப் பொருளாதாரரீதியாக பின்தங்கிய நிலையில் வாழ்ந்துவரும் மக்கள் மத்தியில் ஆரோக்கியமான ஒரு சமூகப் பொருளாதார வாழ்வியல் நிலைக்கு மக்களை உயர்த்திச் செல்வதற்கு இதுபோன்ற சிறுவர் பூங்காக்களைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

**பொறுமையின் எல்லையைக் கடந்து விட்டோம் என்பதை செப்ரெம்பர்-01 இல் உலகிற்குத் தெரியப்படுத்துவோம்.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.